ஒரு சனிக்கிழமை யன்று, வழக்கப்படி இயேசுநாதர் ஜெபக் கூடத்தில் போதனை செய்தார். இது சமயம், சூம்பிய கையையுடைய ஒரு மனிதன், ஜெபக் கூடத்துக்கு வந்தான். நோயாளிகளைக் குணப்படுத்தும் இயேசுநாதர், தன் கையையும் குணப்படுத்தக் கூடும் என்ற நம்பிக்கையோடு அவன் சபைக்கு வந்திருந்தான்.

ஓய்வு நாளான சனிக்கிழமை யன்று, ஒன்றும் செய்யக் கூடாது என்பது தெரிந்ததுதானே! எவ்வளவு அவதி தருவதாய் இருப்பினும், மரண ஆபத்து இல்லாவிட்டால், அந்த நோய்க்கு மருத்துவம் செய்யக் கூடாது என்பது பரிசேயர்கள் கடைப்பிடிக்கும் ஒரு ஆசாரம். ஆகவே, இயேசுநாதர் என்ன செய்யப் போகிறார் என்பதை அறியப் பரிசேயர்கள் ஆவலுடன் இருந்தார்கள்.

பரிசேயரின் மனநிலையையும் நோயாளியின் நிலைமையையும் இயேசுநாதர் புரிந்துகொண்டார். ''ஆசாரம் என்பது மனிதனுடைய நலத்துக்காக ஏற்பட்ட சில விதிமுறைகள் ஆகும். ஆகவே, எந்த ஆசாரம் பொதுவாக மனித நலனுக்குத் தீங்கு பயப்பதாய் மாறிப் போகிறதோ, அதைக்கடைப்பிடியாது விட்டுவிடுவது குற்றம் ஆகாது'' என்று இயேசுநாதர் கருதினார்.

ஆகவே, கூட்டத்தின் மத்தியில் சூம்பிய கையுடன் இருக்கும் நோயாளியைப் பார்த்து, ''எழுந்து நில்!'' என்று கூறினார் இயேசுநாதர்.

அதன்படி அந்த நோயாளி எழுந்து நின்றான்.

பிறகு, அருகே இருக்கும் பரிசேயர்களை நோக்கி, ''ஓய்வு நாளான இன்று, நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, உயிரைக் காப்பதோ, அல்லது உயிரை அழிப்பதோ, இதில் எது சட்டபூர்வமான ஆசாரம்?'' என்று இயேசுநாதர் கேட்டார்.

இப்படி இயேசுநாதர் கேட்டதும், பரிசேயர்கள் பதில் சொல்லாது, கோபத்தோடு சுற்றும் முற்றும் பார்த்தார்கள்.

அவர்கள் கோபமாய் இருப்பதைக் கவனித்த இயேசு

நாதர், நோயாளியைப் பார்த்து, "உன் கையை நீட்டு" என்று சொன்னார்.

அதன்படி அந்த நோயாளி கையை நீட்டினன்; சூம்பி இருந்த கை, இப்பொழுது குணமடைந்து நன்றாய் இருந்தது!

இதைப் பார்த்ததும், பரிசேயர்கள் அங்கே இருக்கப் பிரியப்படவில்லை. சபையைவிட்டு எழுந்து வெளியே போய் விட்டார்கள்.

தங்களுடைய ஆசாரங்களுக்கு விரோதமாகக் கிளம்பி இருக்கும் இயேசுநாதரை எதிர்க்கும் காரியத்தில் ஈடுபடத் தொடங்கினர்கள்.

பன்னிருவர்

இயேசுநாதர் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, கிட்டத் தட்ட ஏழெட்டு மாதங்கள் ஆகின்றன. அவர் செய்த புதுமைகளாலும் போதனைகளாலும் கவரப்பட்டு, மக்கள் திரள் திரளாக அவரிடம் வந்தார்கள். சிலர் வீடு வாசல் களைத் துறந்து, அவருக்குச் சீடர் ஆனர்கள். சைமன்-பீட்டர், ஆண்ட்ரு, பிலிப்பு, நத்தானியல், ஜான், ஜேம்ஸ் ஆகியோர், உற்றார் உறவினரையும் வீடுவாசல்களையும் துறந்து, இயேசு நாதருக்குச் சீடர்களாகி, எப்பொழுதும் அவர் கூடவே இருந் தார்கள்.

இந்த ஆறு சீடர்களையும் தவிர்த்து, இப்பொழுது மற்றும் ஒருவர், இயேசுநாதரின் சீடர் கூட்டத்தில் சேர்ந்தார்.

இவர் பெயர் லேவி; இவர் தந்தையின் பெயர் அல்பீயஸ்; கப்பர்நகூமில் வரிவசூல் செய்யும் காரியத்தை இவர் கவனித்து வந்தார். வரி வசூலிப்பவனைக் கண்டாலே, அவனை மக்கள் வெறுப்பது எந்த நாட்டிலும் உண்டு; அன்னியர் களுக்கு அடிமைப்பட்டு இருக்கும் காரணத்தால், யூதர்கள், வரிவசூல் செய்பவர்களை அதிகம் வெறுத்தார்கள்.

இந்த லேவி இயேசுநாதரைப் பெரிதும் மதித்து இருக்க

வேண்டும்; அவர் செய்யும் போதனைகளையும் புதுமைகளையும் பற்றிக் கேள்வியுற்று, இயேசுநாதர்பால் அவருக்கு ஈடுபாடு ஏற்பட்டு இருக்க வேண்டும். தன்னைப் போன்றவர்களை மக்கள் வெறுப்பதை அவர் தெரிந்துகொண் டிருக்க வேண்டும்.

ஒரு நாள் வரிவசூல் செய்யும் இடத்தில் இவர் இருந்தார்; இவர் முன்னே இருந்த மேஜைமீது வரி வசூல்செய்த நாணயங்கள் குவியல் குவியலாக இருந்தன.

இப்படி லேவி இருந்த சமயம், ஒரு நாள், இயேசுநாதர் அந்தப் பக்கமாக வந்தார். அவர் லேவியைப் பார்த்து, ''என் பின்னே வா!'' என்று அழைத்தார்.

அன்புகனிந்த இந்த வார்த்தைகள் தம் செவியில் விழுந்ததும், அனைத்தையும் அப்படி அப்படியே விட்டுவிட்டு, இயேசுநாதரைத் தொடர்ந்து லேவி சென்றார். இவருடைய மற்றொரு பெயர், மத்தேயு என்பது. பைபிளில் புதிய ஏற்பாட்டில் இருக்கும் முதல் சுவிசேஷத்தை எழுதியவர் இவர்தான்.

மத்தேயு என்னும் இந்தப் புதிய சீடர், தாம் சீடனுக் ஆன சமயத்தில், இயேசுநாதருக்கும் அவருடைய மற்ற சீடர்களுக்கும் விருந்து வைத்துக் கௌரவித்தார்.



இந்த விருந்தில் இயேசுநாதரும், ''பாவிகள்'' என்று பரிசேயர்கள் கருதிய பிறரும் கலந்துகொண்டார்கள்.

வரிவசூல் செய்பவர்களுடனும் பாவிகளுடனும் சேர்ந்து, இயேசுநாதர் விருந்து உண்பது, பரிசேயர்களுக்கும் யூத மறைவல்லுநர்களுக்கும் பிடிக்கவில்லை. ''பாவிகளுடன் இயேசுநாதர் கலந்து பழகுகிறார்; சட்டபூர்வமான ஆசாரங்களை எல்லாம் அவர் தகர்த்து எறிகிறார்'' என்று கூச்சல் போட்டார்கள்.

அவர்கள் போட்ட கூச்சல்களுக்கு, இயேசுநாதர் அழகாகப் பதில் சொல்லி இருக்கிறார்:

''உடல் நலத்துடன் இருப்போருக்கு மருத்துவம் செய்யத் தேவை இல்லை; நோயுற்று நலிந்து இருப்போருக்குத் தான் மருத்துவ உதவி தேவைப்படும். பாவிகளுக்குப் போதனை செய்யும் பொருட்டுத்தான் நான் வந்திருக்கிறேன்; நீதிமான்களுக்காக அன்று'' என்று அவர் பதில் சொல்லி இருக்கிறார்.

பசியோடு இருப்பவனுக்கு உணவு தேவைப்படுவதைப் போல, பாவிகளுக்குப் போதனை தேவைப்படுகிறது. சான்றோராய் இருப்போர், பாவிகளை அணுகி, போதனை செய்து, அவர்களைத் திருத்தும் தொண்டில் ஈடுபட வேண்டும். பாவிகளை அணுக அஞ்சுவதும், அவர்களை விட்டு விலகுவதும் எங்ஙனம் இறைவனுக்கு ஏற்பாகும்?

இயேசுநாதர் செய்த போதனைகளில் இது தலையாய போதனை யாகும்.

இயேசுநாதர் செய்யும் போதனைகளுக்கும் புதுமைகளுக்கும் ஆதரவு கிடைத்து வந்தபோதிலும், எதிர்ப்பும் கூடவே தொடர்ந்து இருந்து வந்தது. பரிசேயர்களும் மற்றவர்களும் தமது எதிர்ப்பை இனி நிறுத்த மாட்டார்கள் என்பதையும், தமது மண்ணுலக வாழ்க்கை விரைவில் முடியப் போவதையும், தமது தெய்வீக உணர்வால், இயேசுநாதர் உணர்ந்துகொண்டார். ஆகவே, தமக்குப் பின்னர், தாம் செய்யும் போதனைகளை, உலகில் தொடர்ந்து மக்களிடையே பரப்புவதற்கு ஒரு ஏற்பாடு செய்ய, இயேசுநாதர் திருவுளம்கொண்டார்.

இந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னர், மலைக்குச் சென்று இரவு முழுதும் பிரார்த்தனை செய்தார் இயேசுநாதர். பொழுது புலர்ந்ததும் கீழே வந்து, தம் சீடர் குழாத்திலிருந்து பன்னிரண்டு பேரைத் தேர்ந்து எடுத்து, ''அப்போஸ்தலர்கள்'' என—அதாவது ''அனுப்பப் பட்டவர்கள்''—என அழைத்தார்.

பன்னிரண்டு என்பது யூதர்களுக்கு மிகவும் பிரியமான

ஒரு எண்ணிக்கை. யூதர்களின் மூதாதை இஸ்ராயேல் என்பவருக்குப் பன்னிரண்டு ஆண் மக்கள் பிறந்தனர். ஒவ்வொரு புதல்வனையும் தம் மூதாதையாகக்கொண்டு, யூதர்களிடையே அதனால் பன்னிரண்டு கோத்திரங்கள் உண்டாயின; இந்தப் பன்னிரண்டு கோத்திரங்களையும் யூதர்கள் பெரிதும் மதித்துக் கொண்டாடினார்கள்.

தாம் தேர்ந்து எடுத்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் கொண்டு, திருச் சபை ஒன்றை இயேசுநாதர் நிறுவினார்; அந்தச் சபைக்குத் தலைவராக, சைமன் பீட்டர் என்பவரை நியமித்தார். தமக்குப் பின்னர் செய்ய வேண்டிய பணிகளையும் பொறுப்புகளையும் இந்தத் திருச் சபையிடம் ஒப்படைத்தார்.

இந்தப் பன்னிரு அப்போஸ்தலர்களையும் பற்றிய குறிப்புகளை அடியில் தந்திருக்கிறேன்:

(1) பீட்டர்: இவருடைய முந்திய பெயர் சைமன், இவர் தந்தை பெயர் ஜோனாஸ். தம்பி பெயர் ஆண்ட்ரூ. கடலில் மீன் பிடித்து வியாபாரம் செய்தவர். ஓரளவு கல்வி கற்றவர். பெத்சையிதா என்னும் ஊரைச் சேர்ந்தவர். கப்பர்நகூமிற்கு வந்து, தன் மனைவியுடனும் மாமியாருடனும் வசித்து வந்தார். கிறிஸ்து சமய சம்பந்தமாக, உயிர்த் தியாகம் செய்த பெரியவர் இவர். முதல் போப்பும் இவரே.

(2) ஆண்ட்ரூ: இவர் பீட்டருடைய சகோதரர். புனலாட்டும் ஜானிடம் முதலில் சீடராய் இருந்தவர். பிறகு இயேசுநாதரின் சீடரானார். பத்ரே என்னும் இடத்தில் சிலுவையில் ஏற்றப்பட்டு உயிர் நீத்தார்.

(3) செபெதேயு ஜேம்ஸ்: இவர் ஜான் என்பவரின் சகோதரர். செம்படவர். கடைசிவரை இயேசுநாதருடன் இருந்தவர். இவரை ஹிரோத் அக்கிரிப்பா என்பவன் மரண தண்டனை விதித்துக் கொன்றுவிட்டான்.

(4) ஜான்: இவர் ஜேம்ஸின் சகோதரர்; இயேசுநாதர் பெரிதும் நேசித்த சீடர். நான்காம் சுவிசேஷத்தை எழுதியவர். இயேசுநாதர் நெருங்கிப் பழகிய சீடர்கள் மூவரில்

இவரும் ஒருவர். இவர் தந்தையின் பெயர் செபெதேயு. நீண்ட காலம் உயிர் வாழ்ந்து, இவர் காலமானர். அப்போஸ்தலர்களில் கடைசியாகக் காலமான அப்போஸ்தலர் இவர்.

(5) பிலிப்பு: அப்போஸ்தலர் என்பதைத் தவிர்த்து, இவரைப்பற்றி வேறு எதுவும் அதிகமாகத் தெரியவில்லை.



(6) பார்த்தாலாமியூ: இந்தியாவில் இயேசுநாதரின் போதனைகளை இவர் பரப்பியதாகக் கருதுகிறார்கள். இவரைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. நாடுகள்தோறும் சுவிசேஷத்தை இவர் பரப்பிச் சென்ற சமயம், அர்மீனிய நாட்டுக்குச் சென்றார் என்றும், அங்கே உயிருடன் தோலை உரித்துச் சித்திரவதை செய்து, தலைகீழாக இவரைச் சிலுவையில் தொங்கவிட்டுக் கொன்றார்கள் என்றும், கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

(7) தாமஸ்: இவர் எதையும் எளிதில் நம்பாத சுபாவம் உள்ளவர். ஆயினும், இயேசுநாதரிடம் இவர் பிரியத்துடன் நடந்துகொண்டார். இந்தியாவுக்கு வந்து அவரது சுவிசேஷத்தைப் பரப்பியவர்.

(8) மத்தேயு: ரோமர்களுக்கு வரி வசூல் செய்து கொடுக்கும் அதிகாரியாய் இருந்தவர். செல்வந்தர். புதிய ஏற்பாட்டில் முதல் சுவிசேஷத்தை எழுதினவர். இயேசுநாதருக்குப் பின், பதினைந்து ஆண்டுகள்வரை, உயிர் வாழ்ந்து, இயேசுநாதரின் போதனைகளைப் பரப்பியவர்.

இவருடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றிய குறிப்பு எதுவும் ஆதாரபூர்வமாகக் கிடைக்கவில்லை.

(9) அல்பேயு ஜேம்ஸ்: இவர் தந்தை பெயர் அல்பீயஸ். ஜெருசலத்தில் இவர் வாழ்ந்தபோது, பரிசேயர்களும் வேதபாரகர்களும் கல்லால் அடித்து இவரைக் கொன்றுவிட்டார்கள் என்று கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

(10) ததேயுஸ்: ஜேம்ஸின் சகோதரர் இவர்; இவரைப் பற்றி மேலும் ஆதாரபூர்வமான செய்தி எதுவும் கிடைக்கவில்லை.

(11) கனனேயு சைமன்: பன்னிருவரில் ஒருவர் என்னும் விவரத்தைத் தவிர்த்து, வேறு ஒன்றும் அதிகமாகத் தெரியவில்லை. யூதேயாவில் தோமிஷியன் ஆட்சி செய்த காலத்தில், இவரைச் சிலுவையில் ஏற்றிக் கொன்றுவிட்டார்கள் என்று கர்ண பரம்பரைச் செய்தி கூறுகிறது.

(12) யூதாஸ் இஸ்காரியோத்: பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன். இயேசுநாதரைக் காட்டிக் கொடுத்தவன். பின்னர், தான் செய்த தவறை உணர்ந்து, வருந்தி, தற்கொலை செய்துகொண்டவன்.

இவர்கள் இயேசுநாதரைத் தங்கள் குருநாதராக நினைத்து, அவரிடம் அன்போடும் மரியாதையோடும் நடந்து கொண்டார்கள். யூதாஸ் இஸ்காரியோத்தைத் தவிர்த்து, மற்றவர்கள் அவர் செய்த போதனைகளை மற்ற நாடுகளில் அக்கறையோடு பரப்பினார்கள். ஏறக்குறைய எல்லோருமே தங்கள் இன்னுயிரையும் கொடுத்து, இயேசுநாதரின் போதனைகளைப் பரப்பி இருக்கிறார்கள் என்பது கவனிக்கத் தக்கது.

மத்தேயு என்பவரைத் தவிர்த்து, இயேசுநாதர் பொறுக்கி எடுத்த அப்போஸ்தலர்கள் அனைவரும் ஏழைகள். ஏழைகளுக்குத் தொண்டு செய்யப் பிறந்தவர் இயேசுநாதர். அதனால், அவர் ஓர் ஏழையாக வளர்ந்தார்; ஏழை எளியவர்களோடு கலந்து பழகினார்; ஏழைகளையே தம் சீடர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

சுவிசேஷத்தை எழுதின நால்வரில் மத்தேயுவும் ஞானும்





அப்போஸ்தலர் ஆவர். லூக்காவும் மாற்கும் சீடர்களே யன்றி, அப்போஸ்தலர்கள் அல்லர்.

மலைமீது செய்த உபதேசம்

இயேசுநாதர் புரிந்த போதனைகளும், அவர் செய்த புதுமைகளும் மக்களை அவர்பால் அதிகம் ஈர்த்தன. பல் வேறு பகுதிகளிலிருந்தும் கூட்டம் கூட்டமாக வந்து, மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். தங்கள் உடலை வாட்டும் பிணிகளை அகற்றிக்கொள்ள விரைந்தார்கள். உடலில் இருக்கும் மாசுகளைப் போக்கிக்கொள்வதில் ஆர்வம் அதிகம் காட்டினரே யன்றி, உள்ளத்தில் இருக்கும் மாசுகளைப் போக்கிக்கொள்வதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டாது இருந்தனர்.

மக்களின் இந்த மன நிலையை அறிந்த இயேசுநாதர், இதைப்பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, வழிகாட்டி, அவர்களை நல் வழியில் செலுத்த விரும்பினார்.

கப்பர்நகூம் என்னும் ஊருக்கு இரண்டு மைல் தூரத்தில் இருக்கும் தைபீரிய ஏரியின் மேற்குக் கரையில், ஐந்நூறு அடி உயரமுள்ள குன்று ஒன்று இருக்கிறது. அதை அடுத்து, சரிவான பீட பூமி ஒன்று இருக்கிறது. கப்பர்நகூமுக்கு அண்மையில் இருக்கும் இந்தக் குன்றுக்கு அடிக்கடி சென்று, இயேசுநாதர் தியானம் செய்வது வழக்கம்.

இந்தக் குன்றுக்கு ஒரு நாள் இயேசுநாதர் தம் சீடர் பன்னிருவரையும் அழைத்துச் சென்றார். ''கிறிஸ்தவ சமயத்தின் சாரம்'' என்று பலராலும் போற்றிக் கொண்டாடப்படும் ஒரு உபதேசத்தைத் தம் சீடர்களுக்கு, இயேசுநாதர் இந்தக் குன்றிலிருந்து செய்தார்.



''மலைமீது செய்த உபதேசம்'' என்று இந்த உபதேசத்தை, கிறிஸ்தவ சமயத்தவர் அனைவரும் பெரிதும் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்தவர் அல்லாத மற்ற உலகப்பெரியார்களும் இந்த உபதேசத்தை உயர்ந்த உபதேசம் என்று மதிக்கிறார்கள்.

இந்தஉபதேசத்தை மத்தேயு என்பவரும், லூக்கா என்பவரும், தத்தமது சுவிசேஷங்களில் எழுதி இருக்கிறார்கள். லூக்கா எழுதியிருப்பதைக் காட்டிலும், மத்தேயு மூன்று மடங்கு விரிவாக, இந்த உபதேசத்தை எழுதி இருக்கிறார்.

மலைமீது செய்த உபதேசத்தின் சிறப்பையும் மேன்மையையும் தெரிந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும் பிரியம்

படுவோர், மலைமீது செய்த உபதேசத்தைப் படிப்பது மட்டும் போதாது; பல முறை படித்துப் படித்து அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். சிந்திக்கச் சிந்திக்க, சிந்தனையில் ஒரு தெளிவு உண்டாகும். தெளிவின் பயனாய் உள் ளுணர்வு தோன்றும். அந்த உள்ளுணர்வைக் கொண்டு உலகை நோக்கினால, நீடித்த நன்மை பயப்பது எது, நீடித்த தீமை பயப்பது எது என்பது பளிச்செனப் புலப்படும். படிக் கும்போது மிக மிக எளிதாகத் தோன்றிய அந்த உண்மைகள், வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போது, எவ்வளவு மகத்தான மாறுதல்களை எல்லாம் சமுதாயத்தில் உண்டு பண்ணு கின்றன என்பதையும் தெரிந்துகொள்ள உதவும்.

மனிதன் வாழத் தெரிந்துகொண்டால் மட்டும் போதாது. சாவதற்கும் மனிதன் தெரிந்துகொள்ள வேண்டும்.

மனிதன் ஏன் சாக வேண்டும்? எதற்காகச் சாக வேண்டும்?

இவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவோர், இயேசுநாதரின் வாழ்க்கையை மட்டும் தெரிந்துகொண்டால் போதாது. அவர் செய்த போதனைகளையும், குறிப்பாக, மலைச் சொற்பொழிவையும் கருத்தூன்றிப் படிக்க வேண் டும். படித்தால் மட்டும் போதாது. அவற்றை வாழ்க்கை யில் கடைப்பிடிக்க முயல வேண்டும். உண்மையாக ஒருவன் முயலுவானேயானல், அவன், மனந்திருந்திய புதிய மனிதன் ஆகிவிடுவான். பேராசை, பொறாமை, வன்கண்மை, கோபம், முதலிய அடிப்படைத் தீய குணங்கள் அவனைவிட்டு விலகிப் போகும். பொறுமை, பணிவு, பரிவு, அடக்கம், அன்பு, தியாகம் முதலிய அரும் பெரும் குணங்கள் அவ னிடம் அரும்பி மலரத் தொடங்கும்.

ஆகவே, இயேசுநாதர் செய்த மலைச் சொற்பொழிவைச் சிறிது விரிவாக இந்தஅத்தியாயத்தில் நாம் தெரிந்துகொள்ள முயல்வோம். மலைச் சொற்பொழிவைப் படிக்கும்போதும் சரி, அல்லது கடைப்பிடிக்க முயலும்போதும் சரி, முக்கிய

மான ஒரு கருத்தை நாம் நினைவில்கொள்வது அவசியம் ஆகும்.

மனிதனுடைய வாழ்க்கை இந்த மண்ணுலக வாழ்வோடு முடிந்துவிடுவது இல்லை. விண்ணுல வாழ்க்கை என்பதும் அவனுக்கு உண்டு. அந்த விண்ணுலக வாழ்க்கையை அடைய, இந்த மண்ணுலகில் மனிதன் முயல வேண்டும், எப்படி எப்படி முயன்றால், எப்படி எப்படி வாழ்ந்தால்· விண்ணுலகப் பேறு அவனுக்குக் கிட்டும் என்பதை மலைச் சொற்பொழிவு எடுத்துச் சொல்கிறது.

இந்த மண்ணுலக வாழ்க்கை என்பது என்ன? நிறையப் பொருள் ஈட்டி, செல்வச் சீமானாக வாழ்வதா? சுகபோகத்தில் மூழ்கிக் கிடப்பதா? அல்லது பதவிப்பித்துக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றி, அரசன் ஆகி, மற்ற மக்களை அடக்கி ஆள்வதா? புகழ்மீது ஆசைகொண்டு, அல்லும் பகலும் அதற்காக அலைந்து திரிவதா?

பணம்,பதவி, புகழ், சுகம் இந்த நான்கும் விண்ணுலகை அடைய மனிதனுக்கு உதவிபுரியா. விண்ணுலக வாழ்வை விரும்பும் மனிதன், இந்த மண்ணுலகில் வேறு விதமாக வாழ வேண்டும். விண்ணுலகில் நாட்டமுள்ள மனிதனுக்கு, அன்பு இருக்க வேண்டும். அருள் இருக்க வேண்டும். அடக்கம் இருக்க வேண்டும். பொறுமை இருக்க வேண்டும்; தியாகம் இருக்க வேண்டும்; நீதியிலும் நேர்மையிலும் பிடிப்பு இருக்க வேண்டும்; பிறர் பழிப்பதைக் கண்டு, மனம் தளர்ந்து விடுதல் கூடாது; பிறர் புகழ்வதைக் கண்டு, புளகாங்கிதம் அடைதலும் கூடாது; ஊக்கமும் உறுதிப்பாடும் இருக்க வேண்டும்,இப்படிப்பட்ட பண்புகளுடன் இந்த மண்ணுலகில் எவன் வாழ்கிறானோ, அவனுக்கு விண்ணுலகப் பேறு எளிதில் கிட்டும் என்று, மலைச் சொற்பொழிவு போதிக்கிறது.

ஆகவே, மலைச் சொற்பொழிவில் பொதிந்து இருக்கும் கருத்துக்களைத் தனித் தனியாக இனிப் பார்க்கலாம்.

மலைச் சொற்பொழிவில் மண்ணுலக வாழ்வுக்குத் தேவையான போதனைகளும் விண்ணுலக வாழ்வுக்குத் தேவையான போதனைகளும் இருக்கின்றன. மண்ணுலகையும்

விண்ணுலகையும் தொடர்புபடுத்துகின்ற ஒரு போதனை என்று அதைக் கூறினாலும் மிகையாகாது.

தம் போதனைகளின் முகவுரை போலும், அவற்றின் சுருக்கம் போலும், எட்டு உன்னத படிப்பினைகளை இயேசு நாதர் முதலில் குறிப்பிட்டு இருக்கிறார். இவற்றை எட்டுப் பெரும் பேறு என்று கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தவர் கொண்டாடுகிறார்கள். இந்த எட்டுப் பேறுகளையும் அடைய ஒருவன் மனத்தூய்மையோடு முயன்றால், அவனுக்குக் கடவுள் அருள் சுரப்பார் என்றும், அதனால் அழிவில்லாத நிறைவு இன்பத்தில் அவன் திளைக்கலாம் என்றும், கிறிஸ்தவ சமயத்தினர் நம்புகின்றனர். அவை வருமாறு:

1. உள்ளத்தில் எளிமையுடையோர் பேறு பெற்றோர்; அவர்களுக்கு விண்ணரசு கிட்டும்.

2. பணிவுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில், இந்த மண்ணுலகு அவர்களுக்கு வசப்பட்டு நிற்கும.

3. துன்புறுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில், அவர்கள் ஆறுதல் பெறுவர்.

4. நீதிமீது வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர்;ஏனெனில், அவர்கள் மனத் திருப்தி பெறுவர்.

5. இரக்க நெஞ்சுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில், பிறரும் அவரிடம் இரக்கம் காட்டுவார்.

6. தூய நெஞ்சினர் பேறு பெற்றோர்; ஏனெனில், இறைவனைக் காணும் பேறு அவர்களுக்குக் கிட்டும்.

7. சமாதானத்துக்கு உழைப்போர் பேறு பெற்றோர்; ஏனெனில், இறைவனின் மக்கள் என்னும் பேறு அவர்களுக்கு ஏற்படும்.

8. நீதியின் பொருட்டுத் தண்டனை பெறுவோர் பேறுபெற்றோர்; அவர்களுக்கு விண்ணரசு கிட்டும்.

மேலே குறிப்பிட்டிருக்கும் எட்டுப் பெரும் பேறுகளும் இறைவனை வழிபட்டு, பக்தி வாழ்வு வாழ விரும்புவோர்க்கு அவசியம் இருக்க வேண்டும் என்றும், இவற்றை அடையாது எவரும் விண்ணரசை அடைய முடியாது என்றும், இயேசு நாதர் தம் சீடர்களுக்குப் போதித்து இருக்கிறார்; அவர்கள் மூலம் மற்றவர்களுக்கும் போதனை செய்து இருக்கிறார். இந்தப் போதனைகளின் சிறப்பினை ஒவ்வொன்றாக இனிக் கவனிக்கலாம்:

1

உள்ளத்தில் எளிமையுடையோர் பேறு பெற்றோர்; அவர்களுக்கு விண்ணரசு கிட்டும். உள்ளம் எளிமையாயும் பேராசை வயப்படாததாயும் கள்ளம் கவடுகள் இல்லாததாயும் இருக்க வேண்டும். அப்போதுதான் நல்லதை ஏற்றுக் கொள்ளவும் தீயதை விலக்கவும் இறைவனின் சொல்லையேற்று நடக்கவும் நன்மனம் உண்டாகும். தீயதை விலக்கவும், நல்லதைச் செய்யவும், இறைவனின் திருவுளத்துக்குத் தன்னைக் கட்டுப்படுத்தவும், ஒருவன் தெரிந்துகொண்டால், விண்ணுலகில் அவனுக்கு நற்பேறு கிட்டும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. ஆகவே, உலகப் பொருள்மீது மட்டு மீறிய ஆசையோ, சுயநலப் பான்மையோ இறைவனின் திருவுளத்துக்கு எதிர்த்து நிற்பதோ தகாது. எளிய மனம் படைத்த குழந்தைபோல் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்தல் இன்றி அமையாதது.

2

பணிவுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில், அவர்களுக்கு இந்த மண்ணுலகு வசப்பட்டு நிற்கும் பொறுமையுடையோர் தீய குணங்களுக்கு இடம் கொடாமல், உள்ளத்தை எளிமையாய் வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. உலகில் தனக்குள்ள எளிய நிலையைப் பொறுமையோடு ஏற்று வாழ, உள்ளத்தைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது பழமொழி. பொறுமையும் பணிவும் உடையவர்களை, மக்கள் பெரிதும் மதிப்பார்கள். இத்தகைய பொறுமை இருப்பவர்களுக்கு விண்ணுலகமே வசப்பட்டுவிடும்.

3

துன்புறுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில், அவர்கள் ஆறுதல் பெறுவர். பொறுமையும்பணிவும் இருப்பவர்களிடம் சமுதாயத்தில் காணப்படும்அவல நிலைகளையும், தன் சொந்தத் துன்ப நிலையையும் நினைந்து நினைந்து, வருந்தும் மனப்பண்பு இருக்கும். அத்தகையோர் சமுதாய நன்மைக்காக உழைப்பார். அதில் வெற்றி கண்டு ஆறுதலும் பெறுவர். அப்படி இன்றி, எக் கவலையும் இல்லாது எவன் காலத்தை உல்லாசமாகக் கழிக்கிறானோ, இறுதியில் அவன் துயரமே அடைவான்.

4

நீதிமீது வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர்; ஏனெனில், அவர்கள் மனத்திருப்தி பெறுவர். உள்ளத்தில் மேற்கூறிய பண்புகள் மூன்றும் இருந்துவிட்டால், நீதிமீது இயல்பாகவே ஒருவித பசியும் தாகமும் ஏற்பட்டுவிடும். அந்தப் பசியும், தாகமும், அவர்களை இறைவனின் திருப்பணியில் ஈடுபடுத்தும். நீதிக்கும் நேர்மைக்கும் பாடுபட்டு உழைப்போர், வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறுவர்; அந்த வெற்றியில் மனநிறைவையும் பெறுவர்,

5

இரக்க நெஞ்சுடையோர் பேறு பெற்றோர், ஏனெனில், பிறரும் அவரிடம் இரக்கம் காட்டுவர். பிறர் அவல நிலையில் துயருற்று நலிவதைக் கண்டும், இரக்கம்கொள்ளாது இருப்பவன், மனிதன் ஆகான். ஏனெனில், பிறர் படும் துன்பத்தைக் கண்டு இரங்கும் இயல்பு இயல்பாக மனிதனுக்கு உண்டு. ஒரு மாடு, மற்றொரு மாடு துயருற்று நலிவதைக் கண்டு, கண்ணீர் உகுக்காது; ஆனால், உண்மை மனிதனாய் இருப்பவன், பிறர் படும் துன்பத்தைக் கண்டு, வருந்தாமல் இரான். ஆகையால் பிற ஆன்மாக்களிடம்

இரக்கம் கொள்ளும் மனிதன், இறைவனுடைய இரக்கத்துக்குப் பாத்திரனாவான்.

6

தூய நெஞ்சினர் பேறு பெற்றோர்; ஏனெனில், இறைவனைக் காணும் பேறு அவர்களுக்குக் கிட்டும். காமம், ஆசை முதலிய குணங்களுக்கு இடம் கொடாது உள்ளத்தைப் புனிதமாய் வைத்திருத்தல் அவசியம். எண்ணம் தூய்மையாய் இருக்குமானால், சொல் தூய்மையாய் இருக்கும். சொல் தூய்மையாய் இருக்குமாயின், செயல் தூய்மையாய் இருக்கும். எண்ணம், சொல், செயல் மூன்றிலும் ஒருவன் தூயவனாக இருந்து விட்டால், இறைவனைக் காணும் பேறு அவனுக்கு அவசியம் கிட்டும்.

7

சமாதானத்துக்கு உழைப்போர் பேறு பெற்றோர்; ஏனெனில், இறைவனின் மக்கள் என்னும் பேறு அவர்களுக்கு ஏற்படும். ஒருவருடன் ஒருவர் கலந்து பழகி, உறவாடி வாழ வேண்டிய நிலையில் இருப்பவன் மனிதன். மக்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படுவது இயல்பு. அந்த வேற்றுமைகளை மிகைப்படுத்தி, பூசலும் பிணக்கும் ஏற்பட இடம் கொடாது, மக்கள் சமாதானமாக வாழ வேண்டும. அதற்கு யார் யார் முயல்கிறார்களோ, அவர்களை இறைவனின் மக்கள் என உலகத்தார் கொண்டாடுவர்.

8

நீதியின் பொருட்டுத் தண்டனை பெறுவோர் பேறு பெற்றோர். அவர்களுக்கு விண்ணரசு கிட்டும். நீதி, நேர்மை, ஒழுக்கம் இவற்றுக்காகப் பாடுபட்டு உழைப்பவர்களை, இந்தப் பொல்லாத' உலகம் சும்மா விடாது; பழித்துப் பேசி, அவர்கள்மீது குற்றங்களைச் சுமத்தும்;

பிறகு தண்டனைக்கு உட்படுத்தி, அவர்களைத் துன்புறுத்தும், சிற்சில சமயங்களில் அத்தகையோரைக் கொல்லவும் செய்யும். இத்தகைய தண்டனைகளுக்கு உட்பட்டவர்கள் வான் உலகில் பெரும் பேறு பெற்று வாழ்வர்.

இந்தக் கடைசி வாக்கியங்களின் சொற்கள், பிற் காலத்தில் தமக்கு நேர இருப்பதை, இயேசுநாதர். தம் சீடர்களுக்குக், குறிப்பாகச் சொல்லுகிறார் என்று எண்ண இடம் தருகின்றன.

ஒருவன் மண்ணுலகில் பக்தி வாழ்வையும், சிறப்பாக விண்ணுலக வாழ்வையும் பெற, இந்த எட்டுப் பெரும் பேறு களும் வழிகாட்டும் கலங்கரை விளக்கம்போல அமைந்திருக் கின்றன என்று சொல்லலாம்.

இந்தப் பெரும் பேறுகளைப்பற்றித் தம் சீடர்களுக்கு உபதேசம் செய்த பின்னர், இவற்றைக் கடைப்பிடிக்கும் போது, அவர்களை எதிர்நோக்கி இருக்கும் விளைவுகள் யாவை என்பதையும் இயேசுநாதர் தம் சீடர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

''நான் கூறும் இந்த உபதேசங்களை நீங்கள் கடைப் பிடித்துப் போதிக்கும்போது, அதிகாரத்தில் இருப்போர் உங்களை நிந்திப்பார்கள்; இல்லாத பொல்லாத பொய்களை யெல்லாம் உங்கள்மீது சுமத்துவார்கள்; துன்புறுத்தி, உங்களைத் தண்டிக்கவும் செய்வார்கள்; அத்தகைய நிலை உங்களுக்கு நேரும்பொழுது, நீங்கள் பெரும் பேறு பெற்ற வர்கள் ஆவீர்கள். அதற்காக அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்து நீங்கள் ஆனந்தப்படுங்கள். ஏனெனில், வான் உலகில் உங்களுக்குக் கிட்டும் பலன் மிகுதியாய் இருக்கும். முன்பு இருந்த தீர்க்கதரிசிகளையும் அதிகாரத்தில் இருந்த வர்கள் முன்பு கொடுமைப்படுத்தி இருக்கிறார்கள். இதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்.

''இந்தப் பூமியின் சத்தாக விளங்கும் உப்பை நிகர்த்த வர்கள் நீங்கள்; உப்பு தன் சாரத்தை இழந்துவிடுமாயின், வேறு எதைக் கொண்டு, மீண்டும் அதற்கு உப்புத்

தன்மையை ஊட்ட முடியும்? வெளியே கொட்டுவதற்கும் மக்கள் கால்களில் மிதிபடுவதற்கும் சாரமற்ற அந்த உப்பு பயன்படுமே யன்றி, வேறு எதற்கும் அது பயன்படாது.

''உலகின் ஒளியாக நீங்கள் விளங்குகிறீர்கள். மலைமீது கட்டப்பட்டிருக்கும் நகரம் யாருக்கும் மறைந்திருக்க மாட்டாது.

''விளக்கைப் பொருத்தி, அதை எடுத்து, மரக்காலுக்குள் வைக்க மாட்டார்கள். விளக்குத் தண்டின் மீதுதான் வைப்பார்கள்; அப்படி வைத்தால்தான் வீட்டிலுள்ள அனைவருக்கும் அதன் மூலம் வெளிச்சம் கிடைக்கும்.



''உங்களிடையே யிருந்து, மக்களுக்கு ஒளி பரவட்டும்; நீங்கள் செய்யும் நற் செயல்களை எல்லாம் கண்டு மாந்தர்கள் மகிழ்ச்சியடையட்டும். அதன் பயனாய், வான் உலகில் இருக்கும் உங்கள் தந்தையின் மகிமை விளங்கட்டும்.''

தம் சீடர்களுக்கு இவ்வாறு உபதேசம் செய்த பின் தாம், இந்த மண்ணுலகுக்கு வந்திருப்பது எதன் பொருட்டு என்பதை இயேசுநாதர் விளக்கிச் சொன்னார்.

• * •

பரிசேயரும் சதுசேயரும், இயேசுநாதர் புரியும் புதுமைகளையும் அவர் செய்யும் போதனைகளையும் எதிர்த்தார்கள். சட்டத்தை மீறுகிறார் என்றும், ஆசாரத்தைக் குலைக்கிறார் என்றும், பழக்க வழக்கங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் புறம்பாக மக்களை நடத்திச் செல்லுகிறார் என்றும் கூறி, இயேசுநாதரை இவர்கள் நிந்தித்தார்கள்.

பொது மக்களில் பெரும்பாலோர் இயேசுநாதரைப் பலவாறு கொண்டாடினார்கள்; அவரால் மக்கள் நன்மை அடைவர் என்று நம்பி, அவரைப் போற்றினார்கள். ஆனால்,

பரிசேயரும் சதுசேயரும் அவரை வன்மையாக எதிர்த்தார்கள். இதற்குக் காரணம் என்ன? ஒரு சாரார் இயேசு நாதரை ஏன் போற்றினுர்கள்? மற்ருெரு சாரார் இயேசு நாதரை ஏன் தூற்றினுர்கள்?

இயேசுநாதர் யூத இனத்தில் பிறந்தவர் என்பதை நாம் அறிவோம்.

யூதர்கள் மோசஸ் என்னும் தீர்க்கதரிசியால் அறிவிக்கப்பட்ட நியாயப் பிரமாணம் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். தங்கள் இனம் மேலான ஒரு இனம் என்றும், இறைவனுடைய சலுகையைப் பெற்ற தனிச் சிறப்புடைய இனம் என்றும் யூதர்கள் இறுமாந்து இருந்தார்கள்.

இந்த இறுமாப்பின் பயனுய்த் தாங்கள் சொல்வதே சட்டம் என்றும், தாங்கள் கூறுவதே நியாயம் என்றும், யூதர்கள் வாதம் செய்தார்கள். படித்தவர்களும் குருமார்களும், எதற்கு எடுத்தாலும் நியாயப் பிரமாணத்திலிருந்து மேற்கோள் எடுத்துக்காட்டி, மக்களைப் பயமுறுத்தினுர்கள். தாங்கள் கூறுகிறபடிதான் மக்கள் நடக்க வேண்டும் என்றும், இல்லாது போனுல் இறைவன் அவர்களைத் தண்டிப்பார் என்றும் எச்சரித்தார்கள்.

பரந்த மனப்பான்மைக்குப் பதிலாக, யூதக் குருமார்களிடையே குறுகிய மனப்பான்மை நிலவிற்று; வேத நூல்களின் உணர்ச்சியையும், உட்கருத்தையும் புரிந்துகொள்ளாமல், மேலோட்டமாகப் படித்து, அதன்படி வாழ்க்கை நடத்தத் தொடங்கினுர்கள். எதற்கு எடுத்தாலும் நியாயப் பிரமாணத்திலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டுவதும், அறிவுக்குப் புறம்பானதாய்த் தெரிந்தபோதிலும் அதுபற்றி அசட்டையாக இருப்பதும், அல்லும் பகலும், ''ஆசாரம்! ஆசாரம்!'' என்று கூறிக்கொண் டிருப்பதும் அவர்களின் வாழ்க்கை முறையாகிவிட்டன.

இதனுல் பொது மக்களுக்கும் குருமார்களுக்கும்

இடையே, இருக்க வேண்டிய மனிதாபிமானத் தொடர்பு இல்லாது போயிற்று.

அன்பும் நீதியும் நேர்மையும் பரிவும் இருக்க வேண்டிய இடத்தில், அச்சமும் அநீதியும், தண்டனையும் கொடுமையும் ஆதிக்கம் செலுத்தின.

குறிப்பிட்ட ஒரு வகுப்பாரை மட்டுமே கடவுள் காப்பாற்றுவார் என்றும், மற்றவர்களைக் கடவுள் தண்டிப்பார் என்றும் போதனை செய்து, மக்களை வஞ்சித்து, படித்த யூதர்கள் வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

யூதர்கள் கொண்டிருந்த இந்தக் குறுகிய மனப்பாங்கை இயேசுநாதர் கண்டித்தார். ஒரு வகுப்பாருக்கு மட்டுமே கடவுள் உரியவர் அல்லர்; உலகம் முழுவதற்கும் அவர் தான் தந்தை. தந்தைபோன்ற கடவுள் அனைவரிடத்திலும் அன்புடையவர் என்றும், ஆகவே, அவரை நேசித்தல்வேண்டும் என்றும் எடுத்துக்காட்டி இயேசுநாதர் போதனை செய்தார்.

இத்தகைய போதனைகள் நியாயப் பிரமாணத்துக்கு மாறுபட்டவை என்று குருமார்களும் அவர்களைச் சார்ந்த மற்றவர்களும் கூக்குரலிட்டார்கள். சமயக் கட்டுக் கோப்புகளை இயேசுநாதர் தகர்ப்பதாகக் குற்றம் சாட்டினார்கள்.

ஆகவே, குருமார்கள் செய்யும் குற்றச்சாட்டை மறுத்து, தம் சீடர்களுக்கு, இயேசுநாதர் விளக்கம் சொன்னார்:

''நியாயப் பிரமாணத்தையோ அல்லது தீர்க்கதரிசிகளையோ அழிக்க வந்திருப்பதாக என்னை நீங்கள் எண்ண வேண்டாம். தீர்க்கதரிசிகளின் போதனைகளையும் நியாயப் பிரமாணத்தையும் நிறைவேற்றி நிறைவுபடுத்தும் பொருட்டே நான் வந்திருக்கிறேன். இதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்'' என்று இயேசுநாதர் சொன்னார்.

''கொலை செய்யாதே; அது பாவம்; பாவம் செய்பவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது'' என்று முன்னோர் போதனை செய்து இருக்கிறார்கள்.

இந்தப் போதனையை இயேசுநாதர் நிறைவுபடுத்தும் திறமையைப் பாருங்கள். கொலை செய்வது மட்டுமே அன்று! கொலைக்குத் தூண்டுகோலாய் இருக்கும் காரணங்

களும் பாவத்தின்பாற்படும் என்று இயேசுநாதர் கூறுகிறார்:

> "கொலை செய்யாதே' "கொலை செய்பவன் தண்டனைக்கு இலக்காவான்" என்று முன்னோருக்கு உரைத்த போதனையை நீங்கள் அறிவீர்கள். ஆனால், தன் சகோதரன் மீது கோபம் கொள்கிற எவனும் நியாயத் தீர்ப்புக்கு ஆளாவான் என்று நான் சொல்லுகிறேன் தன் சகோதரனை வீணன் என்று சொல்லுகிறவன் சனதரீம் சங்கத் தீர்ப்புக்கு ஏதுவாய் இருப்பான்; தன் சகோதரனை, "மூடன்" என்று சொல்லுகிறவன் எரிநரகிற்கு ஏதுவாய் இருப்பான்."

இத்தோடு மட்டும் இயேசுநாதர் நிறுத்திக்கொள்ள வில்லை. இன்னும் ஒரு படி அவர் மேலே செல்லுகிறார்.

கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவது முக்கியமா? அல்லது தன் சகோதரனுடன் இணங்கிப் போய் ஒற்றுமை யாக வாழ்வது முக்கியமா? இந்த இரண்டில் எதை முதன் மையாகக் கருத வேண்டும்?

இதற்கு இயேசுநாதர் பதில் சொல்லி இருக்கிறார். இறைவனுக்குக் காணிக்கைச் செலுத்துவதைக் காட்டிலும், தன் சகோதரனுடன் இணங்கிப் போய் ஒற்றுமையாக வாழ்வதே மேலானது என்று, இயேசுநாதர் அழுத்தமாகவும் திருத்தமாகவும் கூறியிருக்கிறார். அந்த வாசகம் வருமாறு:

> "காணிக்கை செலுத்த நீ பலிபீடத்துக்கு அருகே சென்றதும், உன் சகோதரனோடு உனக்கு வேறுபாடு இருப்பது உன் நினைவுக்கு வருமாயின், காணிக்கையை அந்த இடத்திலேயே வைத்து விட்டு, உன் சகோதரனிடம் திரும்பி, இருவருக்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டை முதலில் போக்கிக்கொள்; பின்னர் வந்து உனது காணிக் கையை இறைவனுக்குச் செலுத்து."

இயேசுநாதரின் இந்த வாசகத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை என்ன?

தன் சகோதரர் போன்று பிறரோடு இணங்கி வாழ

மனிதன் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். பின்புதான் காணிக்கை முதலியவற்றைச் செலுத்த வேண்டும். நாம் எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள்; தம் பிள்ளைகள் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாக வாழ்வதையே இறைவன் விரும்புவாரே யன்றி, வெறும் காணிக்கை போன்றவற்றை அவர் விரும்ப மாட்டார். ஆகவே, சமுதாய ஒற்றுமையிலும் பிறர் நலத்திலும் அதிக நாட்டம் செலுத்துங்கள் என்று இயேசுநாதர் குறிப்பிடுகிறார்.

இந்த உபதேசத்தின் சிறப்பை உண்மையாகவே அறிந்து, உணர்ந்து, வாழ்க்கையில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க முன்வருவார்களாயின், உலகில் போருக்கும் பூசலுக்கும் பிணக்குக்கும் வாய்ப்பு ஏது?

சமுதாயத்தின் முக்கிய உறுப்பாக விளங்கும் குடும்பத்தில் முதலில் ஒற்றுமை நிலவ வேண்டும். அதுவே இயேசுநாதர் போதனையின் முதல் குறிக்கோள் என்று தெரிகிறது.

குடும்பத்தில் ஒற்றுமை நிலவினால் மட்டும் அமைதியாகவும் திருப்தியாகவும் மனிதன் வாழ்ந்துவிட முடியாது. அக்கம் பக்கத்தினரோடு ஒற்றுமையாக வாழ்ந்தால்தான் மனிதன் அமைதியோடு வாழ முடியும்.

மனிதனோடு மனிதன் ஒற்றுமையாக வாழ விடாமல் தடையாய் இருப்பவை இரண்டு: ஒன்று பொன்; மற்றொன்று பெண்.

மக்களிடையே வேறுபாடு ஏற்படுவது பெரும்பாலும் பொன்னால்—அதாவது பணத்தால்—ஆகும். அக்கம் பக்கத்தாருடன் வேறுபாடு, பெரும்பாலும் பொன்னாலும் ஏற்படலாம்; பெண்ணாலும் ஏற்படலாம். ஆகையால், எந்தப் பெண்ணையும் காம இச்சையுடன் நோக்குவதே பாவம் என்று இயேசுநாதர் கூறுகிறார்.

இயேசுநாதர் செய்து இருக்கும் இந்தப் போதனைக்கும் முன்பு வாழ்ந்த தீர்க்கதரிசிகள் இதுபற்றிச் செய்திருக்கும் போதனைக்கும் முக்கியமான வேறுபாடு ஒன்று உண்டு. முன்பு போதனை செய்தவர்கள் வியபிசாரம் செய்வது பாவம் என்று சொன்னார்கள்; இயேசுநாதரோ வியபிசாரம் செய்ய

வேண்டும் என்று இச்சைகொள்வதே பாவம் என்று கூறுகிறார்; இதுபற்றி அவர் செய்திருக்கும் போதனையைக் கீழே படியுங்கள்:

> ''வியபிசாரம் செய்யாதே'' என்று முன்னோருக்குப் போதனைசெய்திருப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனால், நான் சொல்லுகிறேன்: எவன் ஒரு பெண்ணைக் காம இச்சையோடு நோக்குகிறானோ, அவன் தன் இதய மூலமாக அவளோடு வியபிசாரம் செய்தவன் ஆவான். பாவம் செய்வதற்கு உனது வலது கண் கருவியாய் இருக்குமாயின், அதைப் பிடுங்கி அப்பால் எறிந்துவிடு; உனது உடம்பு முழுவதும் நரகம் என்னும் படுகுழியில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உனது உறுப்புகளில் ஒன்றை நீ இழப்பது, உனக்கு நன்மை பயப்பதாகும்.''

வியபிசாரம் செய்வதை மட்டும் பாவம் என்று முன்பு இருந்த சான்றோர்கள் கூறிச் சென்றார்கள். இயேசுநாதரோ வியபிசாரம் செய்ய விரும்புவதே பாவம் என்று கூறுகிறார். விருப்பம் செயலில் ஈடுபடுத்தும்; செயல் பாவத்துக்கு அடிகோலும்; ஆகவே, வியபிசாரம் செய்ய விரும்புவதே பாவம் என்று இயேசுநாதர் எச்சரித்துப்போதனை செய்துஇருக்கிறார்.

ஒருவரோடு ஒருவர் கலந்து பழகுவதற்கும், ஒருவர் உளப்பாங்கை ஒருவர் தெரிந்துகொள்வதற்கும், உதவியாய் இருப்பது பேச்சுமொழி: உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவது உண்மையாகாது; பொய்யும் புனைசுருட்டும் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றுவிட்டால், ஒருவரை ஒருவர் நம்பவும் முடியாது; ஒருவரோடு ஒருவர் அன்போடு கலந்து உறவாடவும் முடியாது. ஆகையால், ஒருவன் தன் மனத்தில் நினைப்பதை, எண்ணுவதை, உள்ளது உள்ளபடி, கூற வேண்டும் என்று இயேசுநாதர் வலியுறுத்தி இருக்கிறார்.

தம் மனத்தில் நியாயம் என்று பட்டதை நியாயம் எனவும், நியாயம் அல்லவென்று பட்டதை நியாயம் அல்ல எனவும் சொல்ல யாரும் தயங்கலாகாது; உள்ளத்தில் இருப்பதை ஒளியாமல் மறையாமல் வெளியிட்டு வந்தால்,

அவன் மனது மாசு மறுவற்றதாக விளங்க வழிபிறக்கும். அதனுல்தான் உள்ளதை உள்ளபடி கூறுங்கள் என்று இயேசு நாதர் போதனை செய்துள்ளார். அந்த வாசகம் வருமாறு:

> "பேசும்பொழுது உங்கள் மனதில் சரி என்று படுவதைச் சரி என்று சொல்லுங்கள்; அல்ல என்று படுவதை அல்ல என்று சொல்லுங்கள். இந்த நிலையைக் கடந்து வெளிப்படும் சொற்கள் தீமை யிலிருந்து பிறப்பனவாம்."

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்.
உள்ளத்துள் எல்லாம் உளன் என்னும் திருக்குறள் கருத்தும் இயேசுநாதர் கூறியிருக்கும் போதனையும் கிட்டத்தட்ட ஒன்றுபோலவே இருப்பது கவனிக்கற்பாலாதாம்,

• • •

மனத்தை ஒருவன் எவ்வாறு பக்குவப்படுத்திக்கொள் வது நலம் என்பதுபற்றி இயேசுநாதர் செய்து இருக்கும் போதனையை இப்போது நாம் பார்த்தோம்; கோபம்கொள்ள லாகாது; காம இச்சையுடன் ஒரு பெண்ணை நோக்குதல் கூடாது; பொய் பேசுதல் கூடாது. இந்த மூன்று போதனை களையும் ஒருவன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகினல், அவன் மனம் மாசுமறுவற்ற பக்குவ நிலையை அடையும் என்பது திண்ணம்.

செயல் பற்றி இயேசுநாதர் என்ன போதித்து இருக் கிருர் என்பதை இனிப் பார்க்கலாம்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் தாழ்வும் இந்த உலகில் அவன் செய்யும் செயல்களைப் பொறுத்தே அமை கின்றன; நல்ல செயலால் நன்மையும் தீய செயலால் தீமை யும் விளையும் என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் ஒரு உண்மை: ஆனல், எது நன்மை? எது தீமை? யாருக்கு நன்மை? யாருக்குத் தீமை? என்பதில் கருத்து வேறுபாடு ஏற் படுவது இயல்பு.

முன்னேர்கள் ஒரு போதனையை அழுத்தமாகக் கூறினர். "ஒருவன் உன் கண்ணைக் கெடுப்பானுயின், அவன் கண்ணை நீகெடுப்பது குற்றமாகாது;ஒருவன் உன் பல்லை உடைப்பானு

யின், அவன் பல்லைப் பதிலுக்கு நீ உடைக்கலாம். அது குற்ற மாகாது'' என்று போதனை செய்துள்ளார்கள்.

இந்தப் போதனையை எழுத்துப் பிசகாமல் கடைப் பிடித்து யூதர்கள் ஒழுகினார்கள்; இதன் பயனாய்ச் சமூகத்தில் ஏற்பட்ட விளைவுகள் விபரீதமாய் இருந்தன. தீமையைத் தீமை மூலம் எதிர்ப்பதால் தீமைகள் பெருகினவே யன்றி, நன்மை ஏற்படவில்லை. மாந்தர்களில் மிகப் பெரும்பாலோர் தண்டனைக்கு அஞ்சி வாழ்ந்தார்களே யன்றி, மனம் திருந்தி வாழவில்லை. தண்டனைக்குப் பயந்து வாழ்வது சிறந்த வாழ்வா? அல்லது மனம் திருந்தி, வாழ்வது சிறந்த வாழ்வா? மனம் திருந்தி வாழ்வதுதான் நல்வாழ்வு என்று இயேசுநாதர் கருதுகிறார். தண்டனை மூலம் திருத்துவதைக் காட்டிலும், போதனை மூலம், ஒழுக்கத்தின் மூலம், திருத்துவதே சாலச் சிறந்த வழி என்று போதனை செய்கிறார்.

தீமையை எதிர்க்கக் கூடாது என்று இயேசுநாதர் கூற வில்லை. தீமையை எதிர்ப்பது மிக மிக அவசியமாகும்; ஆனால் தீமையைத் தீமையால் எதிர்க்கக் கூடாது என்று அவர் கூறு கிறார். அவர் கூறுவதை இனிப் பார்க்கலாம்:

> ''கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல் என்று முன் னோர் போதனை செய்திருப்பதை நீங்கள் கேள்வி யுற்று இருக்கிறீர்கள். ஆனால், நான் சொல்லு கிறேன்; தீமை செய்பவனைத் தீமையால் எதிர்க்க வேண்டாம்; ஒருவன் உனது வலது கன்னத்தில் ஓங்கி அறைந்தால், உனது இடது கன்னத்தையும் அவனுக்கு நீ காட்டு. வழக்காடி உனது வேட்டியை ஒருவன் எடுத்துக்கொள்வானாயின், அவனுக்கு உனது சட்டையையும் கொடுத்துவிடு.''

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

என்பது குறள்.

தீமையைத் தீமை மூலம் எதிர்க்கக் கூடாது; நன்மை செய்வதின் மூலம் அதை எதிக்க வேண்டும் என்று இயேசு நாதர் செய்துள்ள போதனையும, மேலே தந்திருக்கும்

குறளில் திருவள்ளுவர் கூறியிருக்கும் போதனையும் ஒன்று போலவே இருப்பது கவனிக்கத்தக்கது.

* * *

ஒரு சமுதாயம் மேன்மையுடையதாய் விளங்க வேண்டுமாயின், ஒரு மனிதன் தன் உற்றார் உறவினரை மட்டும் நேசிப்பது போதாது; அண்டை அயலாரை நேசிப்பது மட்டும் போதாது; தனக்குப் பகைவராய் இருப்பவரையும் நேசிக்க வேண்டும். பகைமை உணர்ச்சியினால், பூசலும் பிணக்கும் அதிகமாகிப் போருக்கு அது அடிகோலும். ஆகவே, பகைமை உணர்ச்சியை மறந்து, பகைவனை நேசிக்கத் தொடங்கினால், அது பண்பையும் பாசத்தையும் வளர்க்கும். இதுபற்றி இயேசுநாதர் போதனை செய்து இருப்பது வருமாறு:

"உங்கள் அண்டைவீட்டுக்காரரை நேசியுங்கள்; உங்கள் பகைவர்மீது வெறுப்புக் கொள்ளுங்கள் என்று கூறுவதை நீங்கள் கேட்டு இருக்கிறீர்கள். ஆனால் நான் சொல்லுகிறேன். உங்கள் எதிரியை நீங்கள் நேசியுங்கள்; உங்களை வெறுப்பவர்களுக்கு உதவிபுரியுங்கள், உங்களைத் துன்புறுத்துபவர்கள், உங்களை நிந்திப்பவர்கள் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். இப்படிச் செய்தால் வான் உலகில் இருக்கும் உங்கள் தந்தைக்கு—அதாவது கடவுளுக்கு-ஏற்ற புதல்வர்களாக நீங்கள் விளங்குவீர்கள். நல்லோர் என்றும் தீயோர் என்றும் பேதப்படுத்தாமல், அனைவருக்கும் சூரியனின் ஒளி கிட்டும்படி கடவுள் செய்கிறார்; நீதிமான் அநீதிமான் என்ற பேதம் செய்யாமல், அனைவருக்கும் பயன் கிட்டும்படி மழையைப் பொழிகிறார். உங்களைநேசிப்பவர்களையே நீங்களும் நேசிப்பதனால், ஏதாவது பயன் உண்டா? ஆயக்காரரும் (பாவிகளும்) அப்படித்தானே செய்கிறார்கள்? உங்கள் சகோதரர்களுக்கு மட்டும் நீங்கள் மரியாதை செய்வீர்களானால் மற்றவர்களைக் காட்டிலும், அதிகம்

சாதித்துவிட்டதாக உங்களால் சொல்லிக்கொள்ள முடியுமா? இறைவன்பால் ஈடுபாடு இல்லாதவர் களும் அப்படித்தானே செய்கிறார்கள்? வான் உலகில் இருக்கும் உங்கள் தந்தை பரிபூரணராய் இருப்பதைப்போல் நீங்களும் பரிபூரணத்தன்மை யைப் பெற முயலுங்கள்.''

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் ஐந்தாவது அத்தி யாயத்தின், மூன்றாவது வாக்கியத்திலிருந்து, ஏழாவது அத்தியாயம் முடிய, இந்த மலைமீது செய்த சொற்பொழிவு நீண்டு செல்கிறது.

அதில் தருமம் செய்வதைப்பற்றியும், பிரார்த்தனை செய் வதைப் பற்றியும், செல்வம் சேகரிப்பது பற்றியும், உண்டி உடை முதலியவற்றுக்காக மனிதன் கவலைப்படுவது பற்றியும், இறைவன்பால் அன்பு செலுத்த வேண்டிய அவசியம் பற்றியும், மனிதன் செய்ய வேண்டிய இதர கடமை களைப் பற்றியும் விவரிக்கப்பட்டு இருக்கிறது.

அவற்றைப்பற்றி எல்லாம் விரிவாக எழுதவும் விமர்சிக்க வும் முனைந்தால், நூல் பெரிதாகிவிடும். ஆகையால், விரிவு வேண்டுவோர், புதிய ஏற்பாட்டில் இருக்கும் இந்தப் பகுதி களைப் படித்து அறிந்துகொள்க.

கிறிஸ்தவ சமயத்தில் பிரார்த்தனைக்கு, சிறப்பான ஒரு ஸ்தானம் உண்டு. ஆகவே, அதுபற்றி இயேசுநாதர் மலைப் பிரசங்கத்தில் கூறி இருப்பதை, அடுத்த அத்தியாயத்தில் கவனிக்கலாம்.

பிரார்த்தனை எப்படிச் செய்ய வேண்டும்?

கடவுளையும் மனிதனையும் ஒன்றுசேர்ப்பது பிரார்த்தனை. எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளுடன் தம்மை ஐக்கியப் படுத்திக்கொள்ள, அவரை அன்புடன் தியானித்து, அவர் அருளை இறைஞ்சி நிற்பதே, பிரார்த்தனையாகும்.

அடிக்கடி தனி இடத்துக்குச் சென்று இயேசுநாதர் பிரார்த்தனை செய்வது வழக்கம். அமைதியான சூழ்நிலையி

விருந்து தியானம் செய்தால், இறைவனுடைய பெருமையை உணரவும், பற்றற்ற நிலைக்குத் தமது மனத்தைப் பக்குவப் படுத்திக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் நல்ல விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கவும், அவற்றை வாழ்க்கையிற் கடைப்பிடிக்கவும் திறன் உண்டாகிறது.

பிரார்த்தனை என்னும் சொல், இறைவனிடம் தமது வேண்டுதல்களைத் தெரிவித்து, அவருடைய உதவியை மனிதன் நாடுவதைக் குறிக்கும்; ஜெபம் என்பது இறைவனுடைய பெருமையை நினைந்து நினைந்து மனிதன் தியானிப்பதைக் குறிக்கும்.

இந்த இரு நிலைகளையும் பிரார்த்தனை என்னும் ஒரே சொல்லால் கிறிஸ்தவ சமய மரபில் குறிப்பிடுகிறார்கள்.

கிறிஸ்தவ சமய மரபில், பிரார்த்தனைக்கு முக்கிய இடம் உண்டு; கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்யலாம்; தனி இடத்துக்குச் சென்று பிரார்த்தனை செய்யலாம். தம் வீட்டுக்குள்ளேயே அறையில் இருந்து, தாளிட்டுக்கொண்டு, தனித்தும் பிரார்த்தனை செய்யலாம்.

பிரார்த்தனையின் மேன்மையையும் சிறப்பையும்பற்றி, இயேசுநாதர் தம் சீடர்களுக்கு விரிவாக உபதேசித்து இருக்கிறார்.

இயேசுநாதர் உபதேசித்து இருக்கும் பிரார்த்தனையை மிக உன்னதமான ஒரு பிரார்த்தனை என்று, கிறிஸ்தவ சமயத்தினர் கொண்டாடுகிறார்கள்; முக்கியமான சந்தர்ப்பங்களில் இந்தப் பிரார்த்தனையைச் சொல்லுகிறார்கள். குடும்பப் பிரார்த்தனை செய்யும்போது வீடுகளில் இந்தப் பிரார்த்தனையைச் சொல்லுகிறார்கள். இந்தப் பிரார்த்தனையை முழுதும் மனப்பாடம் செய்துகொள்ளாத கிறிஸ்தவரே இருக்க மாட்டார்கள் என்று துணிந்து கூறலாம். பண்டிதர்முதல் பாமரர்வரை, குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை, இந்தப் பிரார்த்தனையை மனப்பாடம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரார்த்தனை இயேசுநாதர் செய்த மலைச் சொற்பொழிவின் ஒரு பகுதி. தமது சுவிசேஷத்தின் ஆறுவது அத்

தியாயத்தில் மத்தேயு, இதை எழுதி இருக்கிறார்; லூக்கா சுருக்கமாக எழுதி இருக்கிறார்.

கிறிஸ்தவ சகோதரர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உன்னதமான ஓர் இடத்தைப் பெற்று இருக்கும் மேன்மை யான அந்தப் பிரார்த்தனையை அடியில் தந்திருக்கிறேன்.

இதை, கர்த்தருடைய பிரார்த்தனை என்று கிறிஸ்தவ சமயத்தினர் பெருமையோடு குறிப்பிடுகிறார்கள்:

> பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பிதாவே! உமது நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக!
>
> உம்முடைய ராச்சியம் வருவதாக! உமது சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, இந்த மண்ணுலகிலும் செய்யப்படுவதாக.
>
> எங்களுக்குத் தேவையான உணவை, இன்று எங்களுக்குத் தாரும்.
>
> எங்களுக்குத் தீமை செய்தவர்களை மன்னிப்பதைப் போலவே, எங்கள் குற்றங்களை நீரும் மன்னிப்பீராக.
>
> சோதனையில் விழாதபடி எங்களைத் தடுத்தாட்கொள்ளும்; தீமையினின்று எங்களைக் காத்தருளும்.

இறைவனிடம் ஒருவன் எப்படிப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதை, வெகு அழகாகவும் கச்சிதமாகவும் இந்தப் பிரார்த்தனையில் இயேசுநாதர் குறிப்பிட்டு இருக்கிறார். இதில் காணப்படும் சிறப்புகளை ஒவ்வொன்றாக ஆராய்வதற்கு முன்னர், பிரார்த்தனை சம்பந்தமாக இயேசு நாதர் கூறி இருக்கும் சில முக்கிய கருத்துக்களை நாம் முதலில் கவனிக்கலாம்.

> பிரார்த்தனை என்பது முழுமுதற் கடவுளோடு, தொடர்புகொள்ள, மனிதன் மேற்கொள்ளும் ஒரு வழியாகும்; அதில் பகட்டுக்கோ படாடோபத் துக்கோ இடம் இருத்தல் கூடாது. பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காகவோ, பிறர் புகழ வேண்டும் என்பதற்காகவோ பிரார்த்தனை செய்தல் கூடாது. அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு மறைவாக இருந்து பிரார்த்தனை செய்ய வேண்டும்; வீண்வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பிரார்த்திப்பது கூடாது. வார்த்தைகளை நிறையக்

கொட்டிப் பிரார்த்தனை செய்தால், இறைவன் எளிதில் செவிசாய்ப்பார் என்று கருத வேண்டாம். உங்களுக்கு இன்னின்ன தேவை என்பதை இறைவன் அறியாதவர் அல்லர்.

மேலே கூறியிருக்கும் நிலையில் ஒருவன் தன்னைப் பக்குவப் படுத்திக்கொண்டு, பிறகு, பிரார்த்தனைச் செய்யத் தொடங்குவதே நலம் என்பதற்காகத்தான், முதலில் மேலேயுள்ள கருத்துக்களைக் கூறிவிட்டு, பிறகு பிரார்த்தனையை இயேசுநாதர் கூறி இருக்கிறார்.

இதை நினைவில் இருத்திக்கொண்டு, இனி, பிரார்த்தனையைப் பற்றிக் கவனிக்கலாம்.

இறைவனுக்கும் மக்களுக்கும் இடையில் நிலவுகிற தொடர்பு, அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் நிலவும் தொடர்பைப்போல, பயம் கலந்த ஒரு தொடர்பாக இருத்தல கூடாது. தந்தைக்கும் மகனுக்கும் இடையில் நிலவும், அன்பு கலந்த ஒரு உறவாக அது இருக்க வேண்டும். உண்மையான தந்தையிடம் உண்மையான மகன் எப்படி நடப்பான்? மரியாதையோடு நடப்பான்; அன்போடு நடப்பான்; அவர் சொல்லுவதை மதித்து நடப்பான். நம் மண்ணுலகத் தந்தையை மதித்து, நாம் அன்பு செலுத்துவது போலவே, விண்ணுலகத் தந்தையான இறைவனிடமும், அத்தகைய உளப்பாங்கைக் கொண்டே நாம் அன்பு செலுத்த வேண்டும்.

அதனால்தான் பிரார்த்தனையின் ஆரம்பத்திலேயே,

''பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பிதாவே!''

என்று இறைவனை இயேசுநாதர் அன்போடு அழைக்கிறார்.

பிரார்த்தனை மூலம் இறைவனோடு தொடர்புகொண்டால் மட்டும் போதாது; உறவுகொண்டால் மட்டும் போதாது: வாக்காலும் மனத்தாலும் பரிசுத்த எண்ணத்தோடு, அவருடைய திருநாமத்தை உச்சரிக்க வேண்டும்; வணங்க வேண்டும்: ''கடவுள் நம் தந்தைதானே! ஆகையால் எதைச் செய்தாலும் அவர் மன்னிப்பார்;என்ன சொன்

னாலும் அவர் பொறுத்துக்கொள்வார்!'' என்று அலட்சியப் புத்தியோடு மரியாதைக் குறைவாக மனிதன் நடத்தல் கூடாது. அதனால்தான், ''பரமண்டலத்திலிருக்கும் எங்கள் பிதாவே!'' என்று கூறியதைத் தொடர்ந்து,

''உமது நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக!'' என்று கூறி இருக்கிறார்.

இறைவனோடு உறவுகொண்டு, அவருடைய திரு நாமத்தைப் பரிசுத்த நினைவோடு சொல்லிக்கொண் டிருப்பது மட்டும் போதாது; அவருடைய விருப்பம் சொர்க்கத்தில் நிறைவேறுவதுபோல், இந்த மண்ணுலகிலும் நிறைவேற ஒவ்வொருவரும், தூய உள்ளத்துடன் முயல வேண்டும். சொர்க்கத்தைப் போலவே இந்த மண்ணுலகையும் ஆக்க, முழு மனதுடன் பாடுபட வேண்டும். அதனால்தான்,

''உம்முடைய ராச்சியம் வருவதாக! உமது
சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவது போலவே,
இந்த மண்ணுலகிலும் செய்யப்படுவதாக!''

என்று பிரார்த்தனை செய்யும்படி இயேசுநாதர் போதித்து, இருக்கிறார்.

இந்தப் பிரார்த்தனையில், மண்ணுல வாழ்க்கை வேறு, விண்ணுலக வாழ்க்கை வேறு என்றும், இரண்டுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் களைந்து, இந்த மண்ணுலகிலேயே விண்ணுலகை நிறுவ, மனிதன் முயல வேண்டும் என்றும் குறிப்பாக உணர்த்தி இருக்கிறார்.

அப்படியானால் இந்த மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் இடையே நிலவும் வேறுபாடுகள் என்ன? அவற்றை நாம் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

விண்ணுலக ஆட்சியில் அன்பு இருக்கும்; அடாபிடித்தனம் இராது; சுயநலம் இராது; பணிவு இருக்கும்; பொறாமை இருக்காது; அடக்கம் இருக்கும்: அதிகாரத் தோரணை இருக்காது; ஆசி இருக்கும்; சாபம் இராது. அருள் செல்வம் இருக்கும்; பொருள் செல்வம் இராது.

இத்தகைய பண்புகளை எல்லாம் அடைவதற்கு நீங்கள் உறுதி பூண்டு முயன்றால் போதும். அப்போது சொர்க்கத்

தில் இருக்கும் இந்தத் தெய்வீகக் குணங்கள் அனைத்தும் உங்களுள் அரும்பி மலரத் தொடங்கும்.

தெய்வீகக் குணங்கள் அனைத்தும் ஒருங்கே சேர்ந்திருக்கும் நிலையையே, இறைவனுடைய சித்தம் என்று இயேசுநாதர் குறிப்பிடுகிறார்.

மனத்தில் இருக்கும் மாசுகளைப் போக்கித் தூயதாக வைத்துக்கொண்டால், அங்கே மேலான பண்புகள் தோன்றும் என்றும், அந்தத் தெய்வீகப் பண்புகளுக்கு இசைய ஒருவன் மனந் திருந்தி இந்த மண்ணுலகில் வாழ்க்கை நடத்தத் தெரிந்துகொண்டால், இறைவனுடைய சித்தம் இந்த மண்ணுலகில் நிறைவேற்றி, இந்த மண்ணுலகம் சொர்க்கமாகலாம் என்றும், அதுவே இறைவனின் ராச்சியம் என்றும், இந்தப் பிரார்த்தனை மூலம் இயேசுநாதர் நமக்கு அறிவிக்கிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்பது குறள்.

மேலே சொன்ன மூன்று வாக்கியங்களையும் அடுத்து, பிரார்த்தனையில் வரும் வாக்கியம், தேவையான உணவை இன்று எங்களுக்குத் தாரும் என்பது.

இந்த வாக்கியத்தில் வரும் உணவு என்னும் சொல், உடலை வளர்க்கும் உணவைக் குறிப்பிடுவதாக நாம் கொள்ளலாகாது; ஏனெனில், "உணவினால் மட்டும் மனிதன் உயிர் வாழ்வது இல்லை" என்று இயேசுநாதர் போதனை செய்து இருக்கிறார்.

ஆகவே, இங்கே உணவு என்பது, இறைவனுடைய அருளையும் குறிப்பதாக நாம் கொள்ள வேண்டும். "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்று இறைவனுடைய அருளைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார் ஒரு தமிழ்ப் பெரியார். இறைவன் அருள் சுரந்தா லல்லது, எந்தக் காரியத்தையும் அவன் தாளை வணங்குவதுகூட யாருக்கும் சாத்தியப்படாது. அதனால் இறைவனுடைய அருளை நாடித் தினந்தோறும் ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்ய

வேண்டும் என்று, இயேசுநாதர் தமது மலைச் சொற்பொழி வில் போதனை செய்துள்ளார்.

இதற்கு அடுத்து வரும் வாக்கியம், மன்னிக்கும் மனப் பாங்கு மனிதனின் நல்வாழ்வுக்கு அவசியம் என்பதைச் சுட்டுவதாய் அமைந்து இருக்கிறது.

மனிதன் குறைபாடுள்ளவன்; பிழை செய்யக் கூடிய வன்; ஆயினும் மற்ற மனிதரோடு சேர்ந்து வாழ வேண்டிய நிலையில் இருப்பவன். இப்படிச் சேர்ந்து வாழும்போது, அறிந்தோ அறியாமலோ, ஒருவருக்கு ஒருவர் தீமை செய்ய நேரலாம். அப்படிப் பிறர் செய்த தீமைகளை, மன்னிக்கும் பண்பை வளர்த்து மனிதன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அப்படி யின்றி, பிறர் செய்த தீமைகளை மன்னிக் காது,பழிக்குப் பழி வாங்கும் மனப்பான்மையுடன் மனிதன் வாழத் தொடங்கினுல், சமுதாயத்தில் போரும் பிணக்கும் பூசலும்தான் மலிந்து போகும். ஆகவே, பிறர் செய்யும் பிழைகளை மனிதன் மன்னிக்க வேண்டுவது அவசியமாகும். அப்படி மன்னிக்கத் தெரிந்துகொண்டு மனிதன் வாழ்க்கை நடத்திஞல், நாம் செய்த பிழைகளை வானுலகத் தந்தை யான இறைவன் மன்னிப்பார். நமது பிரார்த்தனைக்கும் அவர் செவி சாய்ப்பார். இதுபற்றிக் கூறும் பிரார்த்தனை வாசகம் வருமாறு:

> எங்களுக்குத் தீமை செய்கிறவர்களை நாங்கள்
> மன்னிப்பதைப்போலவே எங்கள் குற்றங்களை நீரும்
> மன்னிப்பீராக.

பிறன் தனக்குச் செய்த தீமைகளை மன்னிக்கும் மனப் பாங்கைக் கொண்டிராதவன், தான் செய்த குற்றங்களை மன்னிக்குமாறு இறைவனைக் கோர முடியாது என்பதை இந்த வாசகம் குறிப்பாக உணர்த்துகிறது.

இதை அடுத்து வரும் வாசகம் வருமாறு;

> சோதனையில் விழாதபடி எங்களைத் தடுத்தாட்
> கொள்ளும். தீமையினின்று எங்களைக் காத்தருளும்,

எது நன்மை பயப்பது, எது தீமை பயப்பது, என்பதை அறிவின் துணைகொண்டு, மனிதன் ஓரளவு தெரிந்துகொள்ள இயலுமாயினும், ஆண்டவன் அருள் இருந்தா லன்றி, எது நன்மை பயப்பது, எது தீமை பயப்பது, என்பதை மனிதன் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள முடியாது. ஆகவே, ''அருள் செய்து எங்களைக் காப்பாற்றும்'' என்று இறைவனைப் பிரார்த்திக்கிறது இந்த வாசகம்.

எப்படிப் பழக வேண்டும்?

மலைச் சொற்பொழிவின் முதற் பகுதியில் மனிதன் தன் மனத்தை எப்படிப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைக் கூறி இருக்கிறார். இரண்டாம் பகுதியில், மனிதன் பிரார்த்தனை மூலம் இறைவனோடு தொடர்பு கொள்வது பற்றியும், வான் உலகை எய்துவது பற்றியும் போதனை செய்திருக்கிறார். அந்த இரு பகுதிகளையும் முன் அத்தியாயங்கள் இரண்டிலும் ஓரளவு நாம் கவனித்தோம்.

மலைச் சொற்பொழிவின் கடைசிப் பகுதியில் மனிதரோடு மனிதர் எப்படிப் பழக வேண்டும் என்பதை விவரிக்கிறார். அதை இந்த அத்தியாயத்தில் கவனிக்கலாம்.

மனிதனுடன் மனிதன் தொடர்பு கொள்ளும்போது, அன்பு மட்டும் இடம் பெற்று இருப்பது இல்லை. ஆசைப் பேயின் காரணமாக, அறியாமை வயப்பட்டு மனிதர்கள் தவறு செய்வார்கள். அப்படித் தவறு செய்பவர்களை, மன்னித்தல் வேண்டுமே யன்றித் தண்டித்தல் கூடாது. நமக்குப் பிறர் செய்த தவறுகளை நாம் மன்னித்தால்தான், நாம் செய்த தவறுகளை இறைவன் மன்னிப்பார்.

எந்தச் செயலையும் பிறர் மெச்சுவதற்காகச் செய்யாதீர்கள். அந்தரங்க சுத்தியோடும் அன்போடும் செய்யுங்கள்.

பொருள் செல்வத்தை சேகரித்துக் குவித்து வையாதீர்கள். பூமியில் சேர்த்து வைக்கும் பொருள்களுக்கு அழிவு உண்டு. பூச்சிகள் தின்றுவிடும்; துருப்பிடித்துக் கெட்டுப்

போகும்; மற்ற மனிதர்கள் திருடிக்கொண்டு போய்விடுவார்கள்.

ஆனால் விண்ணுலக வாழ்வுக்குத் தேவைப்படும் செல்வத்தைச் சேகரியுங்கள்; அந்தச் செல்வம் பூச்சிகளால் அழியாது; துருப்பிடித்துக் கெட்டுப் போகாது; திருடர்களால் அபகரிக்கவும் முடியாது.

இரண்டு எஜமானர்களுக்கு ஊழியம் செய்ய ஒருவராலும் முடியாது. செல்வத்தைச் சேகரிப்பதும் இறைவனுக்கு ஊழியம் செய்வதும் ஏக காலத்தில் ஒருவனுக்குச் சாத்தியப்படாது. விரும்பிய ஒருவனைப் பற்றிக்கொண்டு, வேண்டாதவனை விட்டுவிட நேரும்.

உண்டி உடை முதலியவற்றுக்காகக் கவலைப்பட்டுக்கொண்டு காலத்தைக் கழிக்காதீர்கள். ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பறவைகளைப் பாருங்கள்: அவை விதைப்பதும் இல்லை; அறுவடை செய்வதும் இல்லை: களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதும் இல்லை. பரம பிதாவான இறைவன் அவற்றை வாழச் செய்கிறார். அவற்றைப் பார்க்கிலும் மேலான உங்களை அவர் கைவிட்டுவிட மாட்டார்.

உடையின் பொருட்டும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். காட்டில் வளரும் பூக்களைக் கவனித்துப் பாருங்கள். அவை உழைப்பதும் இல்லை. நூற்பதும் இல்லை. இருந்தும் சாலமன் முதலான மன்னர்களும்கூட இவற்றைப்போல், பகட்டாகவும் சிறப்பாகவும் ஆடைகள் அணிந்துகொண்டது இல்லை. அடுப்பிலே போடப்படும் அற்பமான புல்லுக்கே இறைவன் சிறந்த உடைகளை வழங்கி இருக்கும்போது, உங்களுக்கு உடைகளை அவர் வழங்குவார் என்பது நிச்சயம் அல்லவா?

ஆகவே நாளைக்கு என்ற கவலையை மறந்துவிட்டு, இறைவனுடைய ராச்சியத்துக்காகவும் நீதிக்காகவும் பாடுபடுங்கள். இவை அனைத்தும் உங்களுக்குக் கிட்டும்.

நீதியோடு நடந்துகொள்ளுங்கள். பிறர்மீது குற்றம் சுமத்தாதீர்கள். மற்றவர்களை நீங்கள் எப்படி மதிக்கிறீர்களோ, நடத்துகிறீர்களோ, அதன்படியே மற்றவர்களும் உங்களை மதிப்பார்கள்; நடத்துவார்கள்.

உன்பால் காணப்படும் பெரிய குறைபாடுகளைப் பற்றி அறியாமல், அறிந்தும் போக்கிக் கொள்ளாமல் இருந்து கொண்டு, பிறர்பால் காணப்படும் சிறிய குறைபாடுகளை எடுத்துக் காட்டாதே; முதலில் உன்பால் இருக்கும் குறை பாட்டைக் களைந்துக்கொள்; பிறகு, பிறரிடம் காணப்படும் குறைபாடுகளை எடுத்துக் காட்டு.

எப்பொழுதும் இறைவனின் அருளைப்பெற முயலுங்கள். கேளுங்கள், கொடுக்கப்படும்: தேடுங்கள், கிடைக்கும்; தட்டுங்கள், திறக்கப்படும். ஆர்வமுடன் முயன்றாலொழிய அதை நீங்கள் பெற முடியாது.

தந்தை தன் மகனுக்கு நல்லதைத்தான் செய்வானேயன்றி, ஒருபோதும் தீமையைச் செய்ய மாட்டான்; மகன் அப்பம் வேண்டும் என்று கேட்டால், தந்தை கல்லைக் கொடுக்க மாட் மாட்டான்; மகன் மீனைக் கேட்டால், தந்தை பாம்பைக் கொடுக்க மாட்டான்.

உங்கள் பிள்ளைகளுக்கு நல்லதைச் செய்ய நீங்கள் அறிந் திருக்கிறபோது, அனைவருக்கும் தந்தையான இறைவன், விரும்பிக் கேட்டால் தம் பிள்ளைகளுக்கு நல்லதைச் செய்ய மாட்டாரா?

மற்றவர்கள் எதைச் செய்தால் உங்களுக்கு நன்மை என்று நீங்கள் கருதுகிறீர்களோ, அதையே மற்றவர்களுக்கு நீங்களும் செய்யுங்கள்.

நல்ல காரியங்களை எளிதில் செய்ய முடியாது; இடுக்க மான வழியில் செல்வதுபோல, அது சிரமமாய் இருக்கும். சிரமமாய் இருக்கிறதே என்று கருதி நல்ல காரியங்களைச் செய்யாமல் இருந்துவிடாதீர்கள். தீய காரியங்களை எளிதில் செய்ய முடியும்; பலர் தீய வழியிலே சென்றுதான் கெட்டுப் போகிறார்கள். சிரமமும் துன்பமும் நிறைந்ததாய் இருப்ப தால், நல்ல காரியங்களைச் சிலர்தான் செய்ய முடியும்.

வேடதாரிகளைப் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். பசுத் தோல் போர்த்திய புலியைப் போன்று, சிலர் நடமாடு வார்கள்:

''கர்த்தரே! கர்த்தரே!'' என்று என்னை நோக்கிக் கதறு

கிறவன் சொர்க்கத்தில் பிரவேசிக்க முடியாது; பரம பிதா வின் விருப்பங்களை எல்லாம் எவன் நிறைவேற்றி முடிக் கிறானோ, அவனே, சொர்க்கத்தை அடைவான்.

நான் சொல்லும் இந்த வார்த்தைகளுக்குச் செவி சாய்த்து, அவற்றின்படி நடப்பவன், கல்மீது தன் வீட்டைக் கொள்ளும் அறிஞனை நிகர்த்தவன்; எவ்வளவு பெரிய வெள்ளம் வந்தாலும், பெருமழை கொட்டினாலும், பெருங் காற்று அடித்தாலும், கல்மலைமீது கட்டி இருக்கும் வீட்டுக்கு அழிவு நேராது.

நான் சொல்லும் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காமல் வாழ்க்கை நடத்துகிறவன், மணல்மீது தனது வீட்டைக் கட்டிக்கொண் டிருக்கும் அறிவீனனுக்கு இணையாவான். அவன் கட்டியிருக்கும் வீடு பெரு மழையையும், காற்றையும் வெள்ளத்தையும் தாக்குப் பிடிக்க முடியாது அழிந்து போவது திண்ணம்.

இந்த வார்த்தைகள் அனைத்தையும் இயேசுநாதர், உறுதி யோடும் அசைக்க முடியாத நம்பிக்கையோடும் சொன்னார்.

அதிகாரத்தோடும் உறுதியோடும் இயேசுநாதர் உப தேசித்த இந்தப் போதனைகளைக் கேட்டு மக்கள் அதிக ஆச்ச ரியம் அடைந்தார்கள்.

இந்த வாக்கியத்தோடு, இயேசுநாதர் செய்த சிறப்பான மலைச் சொற்பொழிவு முடிவடைகிறது.

சொல்லுதல் யார்க்கும் எளிதாம்; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

என்பது குறள்.

ஆகவே எந்தப் போதனையையும் யாரும் எளிதில் உப தேசித்துவிடலாம்; அதன்படி நடப்பது அவ்வளவு எளிதன்று.

இயேசுநாதர் சம்பந்தப்பட்ட மட்டில், தாம் செய்த போதனைப்படி அவர் நடந்தார்; அதற்காக தமது இன்னு யிரையும் அவர் ஈந்தார். அத்தகைய தியாக புத்தியும் சீல மும், தெய்வீகப் பண்பு உள்ளவர்களுக்குத்தான் எளிதில் சாத்தியமாகும்.

ஆயினும் இந்தப் போதனைகளில் சிலவற்றை ஓரளவா

வது. நாம் பின்பற்றி ஒழுகுவோமேயானால், உலகில் பூசலும் பிணக்குகளும் இரா. பசியும் வறுமையும் இல்லாது போகும்; அறியாமையும் ஆவணமும் அழிந்து போகும்; அணுகுண்டுப் பயமும் அக்கிரமங்களும் தலைதூக்கித் தாண்டவ மாடா. அந்த நாள் வரும் நாள் எந் நாளோ?

நம்பிக்கை வேண்டும்

மலைச் சொற்பொழிவுக்குப் பிறகு, இயேசுநாதர் கப்பர் நகூமுக்குத் திரும்பினார். சில நாட்கள் அங்கேயே பீட்டர் வீட்டில் தங்கி இருந்தார். இயேசுநாதரைப் பற்றிய புகழ் பரவி, மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, பீட்டர் வீட்டுக்கு அருகே நின்றார்கள். வந்தவர்களில் பெரும்பாலோர், தங் களுக்கோ அல்லது தங்கள் உறவினருக்கோ இருக்கும் நோய் களைக் குணப்படுத்திக்கொள்ளும் பொருட்டு வந்திருந் தார்கள். இயேசுநாதருக்கும் அவருடைய சீடருக்கும் உணவு அருந்துவதற்குக்கூட அவகாசம் இல்லை. தம்மிடம் வந்த நோயாளிகளை எல்லாம் இயேசுநாதர் குணப்படுத் தினார்.

கப்பர்நகூமில் படை அதிகாரி ஒருவன் இருந்தான். அவன் மதப்பற்று இல்லாதவன். இருந்தும் யூத மதத்தின் பால் பரிவோடு அவன் நடந்துகொண்டான். தன் சொந்தச் செலவில் கப்பர்நகூமில் ஒரு ஜெபக் கூடத்தை அவன் கட்டிக் கொடுத்து இருந்தான்.

இந்த அதிகாரியிடம் ஒரு அடிமை இருந்தான். அந்த அடிமையை அதிகாரி அன்போடு நடத்தினான். வேலைக்கார னாக நினையாமல் தன் சொந்த மகன்போல் பாவித்து அவன் மீது பிரியம் வைத்திருந்தான்.

இந்த அடிமை நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் கிடந்தான். எவ்வளவோ மருத்துவம் செய்தும் நோய் குண மாகவில்லை.

இந்த நிலையில் இயேசுநாதரைப்பற்றி, படை அதிகாரி

கேள்விப்பட்டான். எந்த வைத்தியராலும் குணப்படுத்த முடியாத நோய்களை எல்லாம், அவர் குணமாக்கிவிடுகிறார் என்பது அதிகாரிக்குத் தெரிய வந்தது. இயேசுநாதர் மூலம் தன் அடிமைக்குள்ள நோயைக் குணப்படுத்திக்கொள்ள அந்த அதிகாரி நினைத்தான். ஆயினும், இயேசுநாதரை அவனுக்குத் தெரியாது. இயேசுநாதரின் புகழை அவன் கேள்விப்பட்டிருந்தானே யன்றி, நேரில் அவரை அந்த அதிகாரி பார்த்தது இல்லை. ஆகவே, என் செய்வது என்று அந்த அதிகாரி யோசித்தான்.

ஒரு யூதராய் இருப்பதால், யூதர்கள் மூலமாக இயேசுநாதர் உதவியை நாடலாம் என்று அந்த அதிகாரி எண்ணினான். அதன்படி யூத குலப் பிரமுகர்கள் சிலரிடம் தனது விருப்பத்தை அந்த அதிகாரி தெரிவித்தான்.

அதிகாரியின் விருப்பத்துக்கு யூத குலப் பிரமுகர்கள் இணங்கினார்கள். இயேசுநாதரிடம் சென்று அதிகாரியின் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ''இந்த அதிகாரி உமது உதவியைப் பெறுவதற்கு உரியவர். யூத மக்களை நேசிப்பவர். யூதர்களுக்காக ஒரு ஜெபக் கூடத்தையும் கட்டித் தந்திருப்பவர்'' என்று சொன்னார்கள்.

அதிகாரியின் சார்பாக யூதர்கள் இவ்வாறு பரிவோடு வேண்டியதற்கு இயேசுநாதர் இசைந்தார், தம்மை அழைக்க வந்திருந்த யூதகுலப் பிரமுகர்களோடு சேர்ந்து அதிகாரியின் வீட்டுக்குப் புறப்பட்டார்.

இயேசுநாதரும் பிறரும் தன் வீட்டை நாடி வருவதை அந்த அதிகாரி கவனித்தான். தன் இல்லத்துக்கு அவர் வருவதற்கு, தான் தகுதியற்றவன் என அந்த அதிகாரி கருதினான். அதற்கு இடம் கொடுக்க, பெருந்தன்மையுள்ள இந்த அதிகாரியின் மனம் ஒப்பவில்லை.

ஆகவே வீதியில் அவர்கள் வந்துகொண்டிருப்பதைப் பார்த்ததும், அதிகாரி ஒரு ஆளை இயேசுநாதரிடம் அனுப்பினான். ''அண்ணலே! தாங்கள் என் இல்லத்துக்கு வர எனக்குத் தகுதியில்லை. ஆகவே தாங்கள் இருந்த இடத்தில் இருந்துகொண்டே ஒரு வார்த்தை சொன்னால் போதும்.

என் அடிமையின் பிணி தீர்ந்துவிடும். அரசனுக்கு அதிகாரிகள் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். அதிகாரிக்குப் பொது மக்கள் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். அவன் 'வா' என்றால் வருகிறார்கள். 'போ' என்றால் போகிறார்கள்'' என்று சொல்லி அனுப்பினான்.

அதிகாரி அனுப்பின ஆள் வந்து, இயேசுநாதரிடம் இந்த விவரத்தைச் சொன்னான்.

தம்பால் அதிகாரிக்கு இருக்கும் அபாரமான நம்பிக்கையைக் கண்டு இயேசுநாதர் அளவற்ற ஆச்சரியம்அடைந்தார்; தம் பின்னே வந்துகொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தை நோக்கி, இவ்வளவு அரிய நம்பிக்கையை இஸ்ராயேல் மக்களிடையிலும் நான் பார்த்தது இல்லை'' என்று இயேசுநாதர் சொன்னார்.

இதன் பின்னர் ''நோய் குணமாகட்டும்'' என்று இயேசுநாதர் கூறினார்.



அந்தக் கணமே அதிகாரியின் அடிமை குணமடைந்தான்.

இந்தப் புதுமைக்குப் பின்னர் ஒரு நாள் இயேசுநாதர் தம் சீடர்களையும் அழைத்துக் கொண்டு, நைம் என்னும் ஒரு சிற்றூருக்குச் சென்றார்.

இந்த ஊர் நாசரத்திலிருநது சுமார் எட்டு மைல் தொலைவில் இருக்கிறது. இயேசுநாதர் இந்த ஊருககுள் நுழைய இருந்தபோதும், தம் எதிரே கூட்டம் ஒன்று வந்து கொண்டிருப்பதை இயேசுநாதர் கவனித்தார். ஒரு வாலிபன் பிணத்தைப்

பாடைமீது வைத்துத் தூக்கிக்கொண்டு மக்கள் வந்தார்கள். பாடைக்குப் பக்கத்திலே வாலிபனுடைய விதவைத் தாய் வந்தாள். அளவற்ற துயரில் மூழ்கிக் கிடக்கும் விதவைத் தாய்க்கு ஊர் மக்கள் ஆறுதல் சொல்லிக்கொண்டு வந்தார்கள். தாய் படும் துயரத்தைப் பார்த்ததும், இயேசுநாதர் அவள் மீது பரிவு கொண்டார். அவளை நோக்கி, ''அழாதே!'' என்று ஆறுதல் சொல்லித் தேற்றினார்.

பிறகு பிணம் இருக்கும் பாடை அருகே சென்றார். பாடை மீது தம் கையை இயேசுநாதர் வைத்ததும், பிணத்தைத் தூக்கி வந்தவர்கள் நின்றார்கள். இயேசுநாதர் ''வாலிபனே! எழுந்திரு'' என்று சொன்னார்.

பிணமாய்க் கிடந்த வாலிபன் எழுந்து உட்கார்ந்து பேச ஆரம்பித்தான்.

பாவி தொடலாமா ?

முன் அத்தியாயத்தில் குறிப்பிட்ட இரு புதுமைகளும் நடந்த சமயம் புனலாட்டும் ஜான் முனிவர், சிறைவாசம் செய்தார். தன் மனைவியின் பேச்சுக்குச் செவி சாய்த்து, அரசன் எரோது ஆந்திப்பாஸ், அவரைச் சிறையில் வைத்திருந்தான். ஆயினும் முனிவரிடம் பரிவுகொண்டு, அவருக்குத் தேவையான சலுகைகளைச் செய்து வந்தான்.

சிறையில் இருக்கும் ஜானுக்குச் இயேசுநாதர் செய்யும் புதுமைகளைப் பற்றிய செய்திகள் எட்டின. உண்மையில் இயேசுநாதர் எதிர்பார்த்த மெசியாதான் என்பதை ஜான் அறிவார். இருந்தாலும் அவருடைய சீடர்கள், இயேசுநாதரை மெசியா என்று நம்பாமல் இருந்தனர். இயேசுநாதர் வாய்மொழி மூலமும் அவர்தான் மெசியா என்பதைத் தம் சீடர்களுக்கு நிரூபிக்கவும், தான் இயேசுநாதர் பற்றி எண்ணியிருந்த கருத்தை மேலும் உறுதிப்படுத்திக்கொள்ளவும் ஜான் முனிவர் தீர்மானித்தார். ஆகவே, இரு சீடர்களை இயேசுநாதரிடம் அனுப்பி, ''வரவேண்டிய மெசியா நீர்தானா?

அல்லது வேறு யாரையாவது நாங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டுமா?'' என்று கேட்டு வருமாறு அனுப்பினார்.

சீடர் இருவரும் இயேசுநாதரிடம் வந்தார்கள். அப்போது இயேசுநாதர் பல நோயாளிகளைக் குணப்படுத்திக் கொண்டிருந்தார். குருடனுக்குக் கண்ணைக் கொடுத்தார். செவிடனுக்குக் காதைக் கொடுத்தார். ஊமையனுக்கு நாவைக் கொடுத்தார். நொண்டிக்குக் காலைக் கொடுத்தார். தொழு நோயனுக்குச் சுகமான உடலைக் கொடுத்தார். மனம் கலங்கிப் போய் இருந்தவனுக்குத் தெளிந்த மனதைக் கொடுத்தார். உணர்ச்சி யில்லாத பிணத்துக்கு உயிரைக் கொடுத்தார்.

ஜானுடைய சீடர் இருவரும் இவற்றை எல்லாம் பார்த்துக்கொண் டிருந்தார்கள். பிறகு இயேசுநாதரை அணுகி, ''பெருமானே! வர விருப்பவர் தாங்கள்தானா? அல்லது வேறு யாரையாவது நாங்கள் எதிர்பார்க்க வேண்டுமா?'' என்று எங்கள் குருநாதர் தங்களைக் கேட்டு வரச் சொன்னார்'' என்று கூறினார்கள்.

ஜானின் சீடர்களுக்கு இயேசுநாதர் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. ''நீங்கள் நேரில் பார்த்த நிகழ்ச்சிகளை— குருடர் பார்வை பெற்றது போன்ற புதுமைகளை—உங்கள் ஜானிடம் தெரிவியுங்கள்'' என்று சொன்னார்.

இந்தப் பதிலைக் கேட்டு, சீடர் இருவரும் புனலாட்டும் ஜானிடம் திரும்பி, விவரம் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியைப்பற்றி இத்துடன் நிறுத்திக்கொண்டு, இயேசுநாதர் வாழ்க்கையில் நடந்த குறிப்பிடத்தகுந்த வேறொரு சம்பவத்தைக் கவனிக்கலாம்.

யூதன் ஒருவன் இயேசுநாதரை விருந்துக்கு அழைத்தான். அவன் பெயர் சைமன்.

இயேசுநாதரும் சம்மதித்து, அந்தப் பரிசேயன் வீட்டுக்கு விருந்து உண்ணச் சென்றார். இயேசுநாதரைத் தவிர்த்து வேறு சில யூதர்களும் விருந்துக்கு வந்திருந்தார்கள். அவர்களி இரண்டு ஒருவர், அருகே இருந்து, இயேசுநாதரைக் கவனிக்கும் பொருட்டு வந்தவர்கள்.

விருந்துக்கு வந்தவர்கள் அனைவரும் வழக்கப்படி விருந்து சாப்பிட உட்கார்ந்தார்கள்.

வீட்டுக்கு உரிய சைமன் முறைப்படி இயேசுநாதரை வர வேற்கவில்லை.

விருந்துக்கு வருபவருக்கு முதலில் கால்களைக் கழுவிக் கொள்ள வீட்டுக்காரர் தண்ணீர் கொடுக்க வேண்டும். கால் களைக் கழுவிக்கொண்ட பின், கட்டித் தழுவி வரவேற்க வேண்டும். பன்னீர்போன்ற நறுமண நீர் தெளித்து உப சரிக்க வேண்டும். அழைத்துப் போய் ஆசனத்தில் அமரச் செய்ய வேண்டும்.

இத்தகைய உபசாரங்களை இயேசுநாதருக்குச் சைமன் செய்யவில்லை. இருந்தும் மனம் கோணாது இயேசுநாதர் விருந்து உண்ணச் சென்றார்.

விருந்து ஆரம்பம் ஆயிற்று. மற்றவர்களுடன் சேர்ந்து இயேசுநாதர் விருந்து சாப்பிட்டுக்கொண் டிருந்தார்.

இது சமயம் ஒரு பெண்மணி, விருந்து நடைபெறும் இடத்துக்கு வந்தாள். நேரே இயேசுநாதர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் இடத்துக்குச் சென்று கண்ணீரை மளமள வென்று உகுத்துக் கதறி அழுதாள்.

அந்தக் கண்ணீர்த் துளிகள் இயேசு பெருமானின் பொன்னடிகளில் வீழ்ந்தன. தான் கவலையால் உகுத்த கண் ணீர்த் துளிகள், இயேசுநாதரின் திருவடிகளை நனைத்திருப்ப தைக்கண்ட அவள், தனது அழகிய கூந்தலை அவிழ்த்து, பாதங் களைத் துடைத்தாள். முத்தமிட்டு அந்தத் திருவடிகளைப் போற்றினாள். வரும்போது ஒரு சிமிழில் தான் கொணர்ந் திருந்த நறுமணக் கலவையை எடுத்து, இயேசுநாதரின் திருவடிகள்மீது பூசினாள்.

எதுவுமே பேசாது இந்தக் காரியங்கள் அனைத்தையும் அந்தப் பெண்மணி செய்து முடித்தாள். இயேசுநாதரும் ஒன்றும் பேசாது அனைத்தையும் ஏற்றுக்கொண்டார்.

மற்ற விருந்தினர்கள் எல்லாரும் கண்கொட்டாமல் நிகழ்ச்சியைக் கவனித்தார்கள். விருந்து வைக்கும் சைமன் முகத்தில் புன்னகை அரும்பியது. இயேசுநாதர் எத்தகைய

வர் என்பதைக் குறித்து ஐயம் ஏற்பட "தீர்க்கதரிசியாய் இருக்கும் ஒருவருக்கு இந்தப் பெண் எப்படிப்பட்டவள் என்பது அவசியம் தெரிந்து இருக்க வேண்டும். பாவ வாழ்க்கை நடத்தும் இந்தப் பாவி, தன்னைத் தொட அனு மதிக்கிறாரே!" என்று நினைத்தார்.

இந்தப் பெண் நல்ல நடத்தை இல்லாதவள். பாவம் செய்து வாழ்ந்தவள்; மனம் திருந்தி வாழ்ந்தால், பாவிகளும் விமோசனம் அடையலாம் என்று இயேசுநாதர் செய்த போதனைகளை அறிந்து, திருந்திய வாழ்க்கை வாழ உறுதி பூண்டவள். தமது திருந்திய வாழ்வுக்கு ஒரு சுப ஆரம்ப மாக முதலில் இயேசுநாதரை அவள் தரிசிக்கப் பிரியப்பட் டாள். அதன் பொருட்டுத்தான், விருந்து நடைபெறும் இடத்துக்கு அவள் வந்தாள்.

இந்தப் பெண்மணியின் மனநிலையை இயேசுநாதர் புரிந்துகொண்டார். அதேபோல விருந்து வைக்கும் சைம னின் மாறுபட்ட மனநிலையையும் புரிந்துகொண்டார். ஆகவே, சைமன் பக்கம் திரும்பி, "சைமனே! உம்மிடம் ஒன்று கூற விரும்புகிறேன்" என்று சொன்னார்.

"அண்ணலே! கூறுங்கள். கேட்கச் சித்தமாய் இருக்கி றோம்" என்று சொன்னார் சைமன்.

உடனே இயேசுநாதர் "ஒரு சமயம் கடன் கொடுத்து வட்டி வாங்கும் மனிதன் ஒருவன் இருந்தான். ஒருவனுக்கு ஐந்நூறு தெனியர்கள் கடன் கொடுத்து இருந்தான்; மற் றொருவனுக்கு ஐம்பது தெனியர்கள் கடன் கொடுத்து இருந் தான். வாங்கிய கடனை இருவராலும் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. கடன் கொடுத்தவன் கொஞ்சம் நல்ல மன துள்ளவன். ஆகையால், வாங்கிய கடனை இருவரும் திருப் பித் தர வேண்டியது இல்லை என்று சொல்லிவிட்டான். இந்த இரு கடன்காரர்களில், கடன் தந்தவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன் யார்? ஐந்நூறு தெனியர் கடன்காரனா? ஐம்பது தெனியர் கடன்காரனா?" என்று கேட்டார்.

"ஐந்நூறு தெனியர் கடன்பட்டவன்தான் அதிக நன்றி

செலுத்தக் கடமைப்பட்டவன். இதில் என்ன சந்தேகம்?'' என்று சைமன் பதில் சொன்னார்.

இப்படிச் சைமன் சொன்னதும் இயேசுநாதர் சைமனை நோக்கி ''எனது கால்களைக் கழுவ எனக்கு நீர் தண்ணீர் தரவில்லை. ஆனால் இந்தப் பெண் தனது கண்ணீரால் எனது பாதங்களைக் கழுவினாள், எனது பாதங்களை நீர் துடைக்கவில்லை. கூந்தலால் எனது பாதங்களை இவள் துடைத்தாள். என் தலைமீது நீர் நறுமண நீர் தெளிக்க வில்லை. இவள் எனது பாதங்களுக்கு நறுமணம் பூசினாள். இவள் பெரும் பாவியேயாயினும் இவளிடம் காணப்படும் அன்பு பெரிது. ஆகவே பாவங்கள் பல இவளுக்கு மன்னிக்கப் பட்டன'' என்றார்.

பிறகு அந்தப் பெண்மணி பக்கம் திரும்பி ''உனது பாவங் கள் மன்னிக்கப்பட்டன'' என்று கூறினார்.

இயேசுநாதர் இப்படிச் சொன்னதும் மற்ற விருந்தினர் கள் ''பாவத்தை மன்னிக்கும் இவர் யார்?'' என்று ஆச் சரியப்பட்டார்கள்.

இவர்களின் கூற்றில் திகைப்பும் வெறுப்பும் தொனித்தன.

இயேசுநாதரோ அந்தப் பெண்மணி பக்கம் திரும்பி ''உனக்கு இருக்கும் அபார நம்பிக்கையே உன்னைக் காப் பாற்றியது. அமைதியாகத் திரும்பிச் செல்'' என்று சொன்னார்.

கிறிஸ்தவ சமயத்தைத் தாங்கி நிற்கும் அடிப்படைக் கோட்பாடுகளில், பாவிகளைக் கை தூக்கிவிடுதல் என்பது, சிறந்த ஒரு கோட்பாடு ஆகும். அருமையான இந்த உயரிய கோட்பாட்டை மக்கள் அனைவருமே, உள்ளன் போடு வாழ்க்கையில் கடைப்பிடிக்க முன்வருவார்களாயின் உலகம் எவ்வளவு மேன்மையாய் இருக்கும்!

படையும் பன்றியும்

மத்தலா என்னும் ஊரில் நடந்த இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அங்கிருந்து இயேசுநாதர் புறப்பட்டார். ஊர்

ஊராகச் சென்று போதனைகளும் செய்தார்; புதுமைகளும் புரிந்தார். அவர் கூடவே அவருடைய பன்னிரு சீடர்களும் சென்றார்கள்; சில பெண்மணிகளும் கூடவே சென்று, இயேசு நாதருக்கும் அவருடைய சீடர்களுக்கும் பணிவிடை புரிந் தார்கள்.

மேரி மத்தேலேனு, அரண்மனை அதிகாரியின் மனைவி சோனனு, சுசானு என்னும் பெண்மணி இந்த மூவரும், இன்னும் சில பெண்களும், இயேசுநாதர் சென்ற இடங் களுக்கு எல்லாம் சென்று பணிவிடை புரிந்தார்கள்; உணவு முதலியவற்றுக்குத் தேவைப்படும் பணங்களைத் தாங்களே மனமுவந்து கொடுத்தார்கள்.

இப்படி ஆதரவு இருந்ததைப் போலவே எதிர்ப்பும் இருந்தது; நிதானம் இழந்து பிரச்சாரம் செய்கிறார் என்று அவரை எதிர்த்தவர்கள் இயேசுநாதர்மீது குற்றம் சுமத் தினார்கள்.

தம் சீடர்களை உடன் அழைத்துக்கொண்டு, ஊர் ஊராகச் சென்று கலிலேயாப் பிரதேசத்தில் இயேசுநாதர் போதனை செய்தார்; கப்பர்கூமுக்கும் நாசரத்துக்கும் இடையில் இருக்கும் ஊர்களில் மட்டுமே இயேசுநாதர் போதனை செய்தார். இந்தக் குறிப்பிட்ட சுற்று வட்டாரத் துக்குள்ளே சுற்றி வந்து அவர் போதனை செய்தார்.

இது சமயம் கூட்டமாக மக்கள் இயேசுநாதர் பின்னே சென்றார்கள்; சிலர் அவர் பினனே பிரியத்துடன் சென்றார்கள்; சிலர் தங்கள் உடலை வாட்டும் நோயைக் குணப்படுத்திக்கொள்ள வந்தார்கள். சிலர் உள்ளத்தின் நோயைக் குணப்படுத்திக்கொள்ள வந்தார்கள் சிலர் வேடிக்கை பார்க்கும் பொருட்டுக் கூடவே வந்தார்கள்; சிலர் உளவறிய வந்தார்கள்; சிலர் எதிர்ப்பதற்காகவே வந் தார்கள்.

இப்படிப் பல திறப்பட்ட மக்கள், இயேசுநாதரைச் சூழ்ந்துகொண்டு அவர் பின்னே சென்றார்கள். ''தேவ குமாரன்! தேவகுமாரன்!'' என்று அவரைப் பாராட்டிப் பேசியவர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். ''பைத்

தியக்காரன்! பைத்தியக்காரன்!'' என்று பழித்துச் சொன்ன வர்களும் இருந்தார்கள்.

எனினும் இயேசு ''மனம் திருந்தி வாழுங்கள்,'' ''என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுங்கள்'' ''பரலோக ராச்சியம் அண்மையில் இருக்கிறது'' என்று போதித்துக் கொண்டே வந்தார். போதனைகளைக் காட்டிலும் புதுமைகளை அதிகம் செய்து வந்தார்.

மேலும் தமது போதனைகளைக் கதைகள் போன்ற உவமைகள் மூலம் விளக்கி இருக்கிறார். கலிலேயா வட்டாரத்தில் போதனை செய்தபோதுதான் பெரும்பாலான கதைகளை அவர் கூறி இருக்கிறார். எந்த எந்தச் சமயத்தில் என்ன என்ன கதைகளை அவர் சொன்னார் என்பதைப் பின்னர் பார்க்கலாம்; இது சமயம் அவர் புரிந்த சில புதுமை களை மட்டும் இங்கே நாம் கவனிக்கலாம்.

ஊர் ஊராகச் சென்று போதனை செய்துவந்த இயேசு நாதர் களைப்புற்றுச் சோர்ந்து போனார். ஆகவே தைபீரிய ஏரியின் மேற்குக் கரையில் நின்ற ஒரு படகில் தம் சீடர் களுடன் ஏறிக்கொண்டு, அதன் கிழக்குக் கரையை நோக்கிப் படகைச் செலுத்தும்படி கூறினார்.

மாலை நேரத்தில் எதிர்க்கரைப் பக்கமாகப் படகைச் செலுத்துவது ஆபத்து. ஏனெனில், மாலையிலும் இரவிலும் அந்த ஏரியில் பெரும் புயல் திடும் என வீசுவது வழக்கம். புயலில் படகு சிக்கிக்கொண்டால், குறிப்பிட்ட இலக்கை நோக்கிப் படகைச் செலுத்த முடியாது.

இருந்தும், இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் ஒரு படகில் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். அயர்வின் காரண மாக, படகின் ஒரு மூலையில் இயேசுநாதர், படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்.

படகு போய்க்கொண்டிருந்தது. மாலை நேரம் வந்தது. கோரமான புயல் ஒன்று உருவாகி, படகை மேலும் கீழு மாகத் தூக்கி அடித்தது. இயேசுநாதரும் சீடரும் சென்ற படகில், தண்ணீர் புகுந்து சிரமத்தைக் கொடுத்தது. படகில் இருந்தவர்கள் அதைப் பத்திரமாகக் கரைசேர்க்கப் பெரிதும்

முயன்றார்கள். சாத்தியப்படவில்லை; இயேசுநாதரோ அதன் ஒரு மூலையில் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்.

சீடர்களோ நிலைமை பயங்கரமாய் இருப்பதைக் கண்டு பதறினார்கள்; மகா ஆபத்தான நிலையிலும் இயேசுநாதர் அயர்ந்து தூங்குவதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். தூக்கத்தைக் கலைத்து எழுப்பி, தவிர்க்க முடியாத ஆபத்தில் தாங்கள் சிக்கித் தவிப்பதை அவரிடம் கூறுவோமா, அல்லது வேண்டாமா என்று நினைத்தார்கள். எழுப்புவது மரியாதைக் குறைவு; எழுப்பாமல் இருப்பது ஆபத்து. என் செய்வது என்று கவலைப்பட்டார்கள். புயல் மேலும் கோரமாக வீசிற்று; படகு அலைப்புண்டு தத்தளித்தது. எழுப்பாமல் தீராது என்ற முடிவுக்கு வந்து தூங்கிக்கொண் டிருக்கும் இயேசுநாதரை அணுகி, ''குருநாதா! ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். காப்பாற்றுங்கள்!'' என்று அலறினார்கள்.

இயேசுநாதர் கண்விழித்து எழுந்தார்; புயல் கடுமையாக வீசுவதைக் கவனித்தார்; சீடர்களின் இதயப் பாங்கையும் தெரிந்து கொண்டார். ஆகவே காற்றைப் பார்த்து, ''அமைதியாக இரு'' என்று உத்தரவிட்டார்.

அடங்கிப் போய்க் காற்று அமைதியாக வீசத் தொடங்கிற்று.

இதன் பின்னர் தம் சீடர்கள் பக்கம் திரும்பி ''ஏன் உங்களுக்கு நம்பிக்கை இல்லை?'' என்று பரிவோடு கேட்டார்.

காற்றையும் அடக்கும் ஆற்றல் தங்கள் குருநாதருக்கு இருப்பதைக் கண்டு சீடர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

இதன் பின்னர் படகு அமைதியாகக் கரை சேர்ந்தது; சீடர்களும் இயேசுநாதரும் படகிலிருந்து இறங்கிக் கொண்டார்கள்.

ஏரியின் கிழக்குக் கரையில் இறங்கிய அவர்கள், சில நாட்கள் அந்தப் பகுதியில் தாமதித்தார்கள்.

* * *

அப்போது ஒரு நாள் இயேசுநாதர் பேயால் பீடித்து இருப்போர் இருவரைக் குணப்படுத்தினர். இதை, மத்தேயு, மாற்கு, லூக்கா மூவரும் எழுதி இருக்கிறார்கள்.

அந்த வட்டாரத்தில், பேயால் பீடிக்கப்பட்ட முரடன் ஒருவன் இருந்தான்; கல்லறைப் பகுதிகளிலும், மற்ற இடங்களிலும் அம்மணக் கோலத்துடன் அவன் சுற்றித் திரிவான். ஆட்களைக் கண்டால் விரட்டிஓடிவந்து அடிப்பான்; கூப்பாடு போட்டுப் பேய்போல் கத்துவான்; அந்த முரடனைப் பிடித்துச் சங்கிலியால் பிணைத்து, கட்டிப் போட்டுப் பார்த்தார்கள்; சங்கிலிகளை உடைத்து எறிந்து, அந்த முரடன் தப்பி வந்து, ஆவேசத்தோடு தாக்கினன். அவனை அடக்கிக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் பெரிதும் அவதிப்பட்டார்கள்.

இத்தகைய முரடன் இயேசுநாதரைப் பார்த்ததும் எதிரே ஓடோடியும் வந்தான். யாரையும் தாக்கும் பழக்கமுள்ள அவன், இயேசுநாதர் அருகே வந்ததும், நெடுஞ்சாண் கிடையாக, அவருடைய அடியிணையில் வீழ்ந்து கூச்சலிட்டுக் கதறினன். "மகிமைவாய்ந்த கடவுளின் திருக்குமாரரே! இயேசுவே! ஆண்டவன் பெயரால் உம்மை வேண்டுகிறேன்; என்னை நீர் துன்புறுத்த வேண்டாம்" என்று கூச்சலிட்டான்.

அந்த மனிதனைப் பீடித்து இருக்கும் பேய்தான் இவ்வாறு அவனை அலறச் செய்கிறது என்பதை அறிந்தவராய், "பேயே! இந்த மனிதனைவிட்டு விலகி ஓடு" என்று இயேசுநாதர் கூறினர்.

இப்படிக் கூறிவிட்டு அந்தப் பேயை நோக்கி, "உன் பெயர் என்ன?" என்று இயேசுநாதர் கேட்டார்.

அதற்கு அந்தப் பேய், "என் பெயர் படை; நாங்கள் நிறையப் பேர் இருக்கிறோம்" என்று பதில் சொல்லிற்று.

"நாங்கள் படை" என்று பதில் சொல்லிய பின், இயேசுநாதரை நோக்கி, "இந்தப் பிரதேசத்தைவிட்டு எங்களைத்

துரத்த வேண்டாம்'' என்று அந்தப் பேய்கள் இயேசு நாதரை வேண்டின.

இந்தச் சமயம், மலையடிவாரத்தில் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண் டிருந்தன.

பன்றிகள் என்றாலே யூதர்களுக்கு மகா வெறுப்பு; அசுத்தமான பிராணி என்று கருதியபடியால், யூதர்கள் பன்றியை வளர்க்க மாட்டார்கள்.

எனவே, இயேசுநாதரிடம், ''இந்தப் பன்றிகளிடையே புகுந்துகொள்ள எங்களை அனுமதியுங்கள்'' என்று பேய்கள் வேண்டின.

''இங்கிருந்து போய்விடுங்கள்'' என்று இயேசுநாதர் கூறினார். கேட்டவாறு அனுமதி கொடுத்தார்.

உடனே படைப் பேய்கள் பன்றிகளுக்குள் புகவும், அவை படுவேகமாக ஓடிப் போய், கடலில் விழுந்து மூழ்கிப் போயின.

இதைப் பார்த்ததும் பன்றி மேய்ப்பவர்கள் பயந்து போனார்கள். ஓடோடியும் சென்று, பன்றிகளின் உடைமைக் காரர்களிடம் விவரத்தைத் தெரிவித்தார்கள். ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகள் கடலில் மூழ்கி இறந்து போயின என்று தெரிகிறது.

விவரம் தெரியவந்ததும், பன்றிக்கு உடைமைக்காரர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு, இயேசுநாதர் இருக்கும் ஏரிக் கரைக்கு வந்தார்கள். தங்கள் ஊரில் இருந்துகொண்டு அட்டகாசம் புரிந்துவந்த, பேய்பிடித்த மனிதன், அமைதி யாக இயேசுநாதரின் பக்கத்திலே அமர்ந்து இருப்பதைப் பார்த்தார்கள்.

பன்றிகளுக்கு உடைமைக்காரர்கள், இயேசுநாதர் புரிந்த இந்தப் புதுமையைக் கண்டதும், பயந்து போனார்கள். நீடித்து இந்தப் பிரதேசத்தில் இயேசுநாதர் தங்கினால், விளைவுகள் விபரீதமாய் இருக்கும் என்று அஞ்சினார்கள். ஆகவே, அவரை நோக்கி, ''இந்தப் பிரதேசத்தைவிட்டுத் தாங்கள் போய்விட வேண்டும்'' என்று நயந்த பாவனையில் வேண்டினார்கள்.

இயேசுநாதரும் சம்மதித்து, தாம் வந்திருந்த படகுக்குச் சென்று ஏறிக்கொண்டார். பேய் நீங்கிக் குண மான மனிதனும், தான் இயேசுநாதருடன் வர விரும்புவ தாகக் கூறினன்.

தம்முடன் வர வேண்டாம் என்றும் ஊருக்குத் திரும்பு மாறும், இயேசுநாதர் அவனுக்குச் சொன்னார்.

அந்த மனிதனும் சம்மதித்து, தன் இருப்பிடம் திரும்பினன்.

தனக்கு இயேசுநாதரால் ஏற்பட்ட நற்பயனை ஊர் மக்களுக்கு அந்த மனிதன் அறிவித்தான்.

விவரம் தெரிய வந்ததும் ஊர் மக்கள் அதிக ஆச்சரியம் அடைந்தார்கள்.

" பெண்ணே ! எழுந்திரு "

இதன் பிறகு, தம் சீடர்களை அழைத்துக்கொண்டு, இயேசுநாதர் ஏரியைக் கடந்து, கப்பர்நகூம் வந்து சேர்ந்தார்.

அவர் வரவை எதிர்பார்த்து, ஏரிக்கரையில் பலர் காத்து இருந்தார்கள்; முக்கியமாக, யூதப் பிரமுகர் ஒருவர் அக்கறையோடும் ஆவலோடும் கரையில் காத்து இருந்தார். அவர் மிகுந்த செல்வாக்குள்ளவர்; சினகோக் சபையை நிர்வகிப்பவர்; பெயர் ஜைரஸ்.

ஜைரஸுக்குப் பன்னிரண்டு வயதில் புதல்வி ஒருத்தி இருந்தாள்; இந்தப் புதல்வியைத் தவிர்த்து, ஜைரஸுக்கு வேறு குழந்தை எதுவும் இல்லை. இந்தப் பெண்ணும் நோயுற்று மரணப் படுக்கையில் கிடந்தாள்.

சாகக் கிடக்கும் தன் ஒரே புதல்வியை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்ற விருப்பம் ஜைரஸுக்கு மிகுதியாக இருந்தது. அதனால்தான் இயேசுநாதரின் வரவை எதிர்பார்த்து, ஏரிக்கரையில் ஆவலோடு அவர் காத்திருந்தார்.

இயேசுநாதர் கரையை அடைந்தாரோ இல்லையோ, ஓடோடியும் சென்று, அவருடைய அடிக்கமலங்களில் வீழ்ந்து ஜைரஸ் கதறினார்: ''பெருமானே! என் ஒரே புதல்வி மரணப் படுக்கையில் கிடக்கிறாள். தாங்கள் வந்து தொட்டு அவளைக் குணப்படுத்துங்கள்; காப்பாற்றுங்கள்'' என்று சொன்னார்.

இயேசுநாதர் தாமதியாது ஜைரஸின் இல்லத்துக்குப் புறப்பட்டார். புதுமைகள் புரியும் இயேசுநாதரைப் பின் தொடர்ந்து, முண்டியடித்து நெருக்கிப் பெருங் கூட்டம் ஒன்று போய்க்கொண் டிருந்தது. சந்தடியும் கூச்சலும் மிகுதியாய் இருந்தன. சிலர் தைரியமாக முண்டியடித்துக் கொண்டு முன்னே சென்று, கூட்டத்தை விலக்கிவிட்டு, இயேசுநாதருக்கு வழி செய்து கொடுத்தார்கள்.

சென்றுகொண்டிருந்த இயேசுநாதர் திடுமென ஒரு இடத்தில் நின்று, திரும்பிப் பார்த்தார். ''என்னை இப் பொழுது தொட்டது யார்'' என்று கேட்டார்.

உடன் வரும் சீடர்கள் ஒன்றும் புரியாது திகைத் தார்கள். ''குருநாதா! முண்டியடித்துக்கொண்டு மாந் தர்கள் தங்களை நெருக்குகிறார்கள்; என்னைத் தொட்டது யார் என்கிறீரே?'' என்று பதில் சொன்னார்கள்.

இயேசுநாதரோ, ''என்னை யாரோ தொட்டார்கள். என்னிடமிருந்து சகதி புறப்பட்டது'' என்றார்.

அப்போது எளிய கோலத்தில் இருக்கும் பெண் ஒருத்தி, இயேசுநாதருக்கு முன்னே வந்து, அவருடைய பாதங்களில் வீழ்ந்தாள். அவளுடைய உடம்பு எல்லாம் நடுங்கிற்று.

தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகளாக உதிரப் போக்கால், அவள் அவதிப்பட்டுக்கொண் டிருக்கிறாள்; அவள் பார்க்காத வைத்தியம் இல்லை; தின்னாத மருந்து இல்லை. கைவசம் இருந்த பணம் முழுவதையும் செல வழித்துத் தீர்த்தாள். இருந்தும் உதிரப் போக்கு அவளுக்கு நிற்கவில்லை.

மருந்து தின்றும் பத்தியம் இருந்தும் பணம் செல வழித்தும் அவள் எய்த்துப் போனாள். மருந்துகளின்மீது

நம்பிக்கையை இழந்துவிட்ட அவள், இப்பொழுதுஇயேசுவின் மீது நம்பிக்கைகொள்ளத் தொடங்கினாள். ''இயேசுநாத ரிடம் சென்றால் உன்னைப் பீடித்து இருக்கும் நோயை அவர் நிச்சயம் குணப்படுத்துவார்'' என்று பலர் அவளிடம் சொன்னார்கள்.

முழு நம்பிக்கையோடு இயேசுநாதரை அவள் அணுகினாள். ''அவருடைய ஆடையைத் தொட்டால்கூட நோய் நிச்சயம் குணமாகிவிடும்'' என்ற முழு நம்பிக்கை யுடன் அருகே சென்று, இயேசுநாதரின் ஆடையை அவள் தொட்டாள். யாருக்கும் தெரியாமல், பின்னாகச் சென்று அவரது ஆடையின் விளிம்பை அவள் தொட்டாள்.

அந்தக் கணமே அவள் குணமடைந்தாள். தம்மீது அபார நம்பிக்கைகொண் டிருந்த அந்தப் பெண்ணை நோக்கி, ''மகளே! நம்பிக்கையின் பயனாய் நீ குணமடைந் தாய்'' என்று கூறினார் இசேநாதர்.

பிறகு இயேசுநாதரும் ஜைரஸூம் மற்றவர்களும் ஜைரஸ் வீட்டை நோக்கிப் போய்க்கொண் டிருந்தார்கள். அப்போது ஒரு ஆள் ஓடி வந்து ஜைரஸிடம், ''தங்கள் புதல்வி இறந்து போனாள். குருநாதருக்குத் தாங்கள் சிரமம் கொடுக்க வேண்டாம்'' என்று கூறினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இயேசுநாதர் ''பயப்பட வேண்டாம்; நம்பிக்கை இருந்தால் போதும். அவள் பிழைத்துக்கொள்வாள்'' என்று பதில் சொன்னார்.

பிறகு எல்லாரும் ஜைரஸ் இல்லத்தை அடைந்தார்கள். இயேசுநாதரையும் அவருடைய சீடர்களையும் தவிர்த்து, ஜைரஸ் தன் வீட்டுக்குள் வேறு யாரையும் அனுமதிக்க வில்லை.

பிணம் தூக்குவோரும் வாத்தியக்காரர்களும் அங்கே தயாராய் இருந்தார்கள். சந்தடியும் சலசலப்பும் இருந்தன. ''யாரும் அழ வேண்டாம்; பெண் இறக்கவில்லை; தூங்கு கிறாள்'' என்று சொன்னார் இயேசுநாதர்.

இயேசுநாதர் இவ்வாறு கூறியதைக் கேட்டவர்கள்

நகைத்தனர். பெண்ணின் பெற்றோர் ஒன்றும் புரியாது, திகைத்து நின்றார்கள்.

தம் மூன்று சீடர்களை—பீட்டர், ஜேம்ஸ், ஜான்—ஆகியவர்களை அழைத்துக்கொண்டு, பெண்ணின் பிரேதம் கிடக்கும் அறைக்குள் இயேசுநாதர் போனார். மற்றவர்கள் பார்த்துக்கொண்டு நின்றார்கள். இயேசுநாதர் இறந்து கிடக்கும் பெண் அருகே சென்று, ''பெண்ணே! எழுந்திரு!'' என்று சொல்லி, அந்தப் பெண்ணின் கையைத் தொட்டார்.

உயிர் வந்து, அந்தப் பெண் உடனே எழுந்து உடகார்ந்தாள்.

அவளுக்கு ஏதாவது உண்ணக் கொடுக்குப்படி இயேசுநாதர் சொன்னார்.

பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கும் வியப்புக்கும் அளவு இல்லை. ''இந்தச் சம்பவத்தை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம்'' என்று பணித்துவிட்டு, இயேசுநாதர், தம்சீடர்களுடன் அங்கிருந்து புறப்பட்டார்.



இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் ஜைரஸ் வீட்டைவிட்டு வெளியே வந்ததும், இரண்டு குருடர்கள், அவரைப் பின் தொடர்ந்தார்கள். ''பெம்மானே! எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள்! எங்கள்மீது இரக்கம் காட்டுங்கள்!'' என்று கூவிய வண்ணம், விடாப்பிடியாய் அவரைத் தொடர்ந்து போனார்கள்.

இயேசுநாதர் அவர்கள் இருவரையும் பார்த்து, "நான் உங்களைக் குணப்படுத்த முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆம். பெம்மானே! நாங்கள் முழுக்க முழுக்க நம்புகிறோம்" என்று இரு குருடர்களும் பதில் சொன்னார்கள்.

அவர்கள் அப்படிச் சொன்னதும் இயேசுநாதர் அவர்களை அணுகி, அவர்கள் கண்மீது தமது திருக் கரத்தை வைத்து, "உங்கள் நம்பிக்கைப்படியே அது நிறைவேறட்டும்" என்று சொன்னார்.

பார்வை பெற்று, அந்த இரு குருடர்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம் என்று இயேசுநாதர் அவர்களிடம் சொன்னார்.

ஆனால், பார்வையைப் பெற்ற குருடர்களால், ஆனந்தத்தை அடக்கிக்கொண்டு இருக்க முடியவில்லை. ஆர்வ மிகுதியால் அனைவரிடமும் தங்களுக்கு நேர்ந்தவற்றை அவர்கள் தெரிவித்துவிட்டார்கள்.

சீடர்களை அனுப்பினார்

கலிலேயாப் பிரதேசத்தில் இயேசுநாதர் தொடர்ந்து போதனைகளையும் புதுமைகளையும் செய்து வந்தார். அவர் சென்ற இடங்களுக்கு எல்லாம் சீடர்களும், கூடவே சென்றார்கள்.

இயேசுநாதரைத் தொடர்ந்து செல்லும் மக்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகி வந்தது. கூனும் குருடும், நொண்டியும் நுடமும், பிணியாளரும் பேதையும், பேய்பிடித்தோரும் பித்தரும், ஆணும் பெண்ணும், அதிகாரியும் அடிமையும், பண்டிதரும் பாமரரும், பெரியோரும், சிறியோருமான பல தறப்பட்ட மக்கள் இயேசுநாதரைப் பின்தொடர்ந்து சென்று, தங்களுக்கு இருக்கும் துன்பங்களையும் துயரங்களையும் குறைபாடுகளையும் குணக்கேடுகளையும் நிவர்த்தி செய்து கொள்ள விரும்பினார்கள்,

ஆயன் இல்லாத ஆட்டு மந்தையைப்போல், மக்கள் சிதறுண்டும் கவிபிடித்தும் இவ்வாறு அலேவதைக் கண்டு, இயேசுநாதர் அவர்கள்மீது பரிவுகொண்டார்.

ஆகவே, தம் சீடர்களே அழைத்து, ''செய்ய வேண்டிய வேலே எவ்வளவோ இருக்கிறது. அறுவடை தயாராயிருக் கிறது. ஆனல், வேலே செய்ய ஆட்கள் குறைவாய் இருக் கிருர்கள். ஆகவே, நீங்கள் சென்று, இறைவனுடைய ராச்சியம் அண்மையில் இருக்கிறது என்னும் நற்செய்தியை மக்களிடையே பரப்புங்கள்'' என்று சொன்னர்.

பிறகு, தாம் அனுப்பப் போகும் தம் பன்னிரு சீடர்களுக் கும் இயேசுநாதர் சில அறிவுரைகள் வழங்கினர். தீய சக்தி களே விரட்டுவதற்கும், நோயாளிகளேக் குணப்படுத்துவதற் கும், அனுமதி அளித்தார்.

பரப்ப இருக்கும் நற்செய்தியை, சிதறிக் கிடக்கும் யூதர் களிடையில் முதன் முதலாகப் பரப்பும்படியும், அதன் பின்னர் யூதர் அல்லாதவர்களிடையிலும், சமாரியர் களிடையிலும் செல்லலாம் என்றும் சொன்னர்.

அரசியல் விவகாரங்களிலும், பொருளாதாரப் பூசல் களிலும் சிக்கிக்கொள்ளாமல், அவற்றில் அதிக அக்கறை காட்டாமல், நற்செய்தியை மக்களிடையே பரப்பும் பணியை மட்டும் செய்யுமாறு, தம் சீடர்களுக்கு இயேசு நாதர் சொன்னர்.

''செய்யும் பணியை, சுயலாப நோக்கத்துடன் செய்யா தீர்கள்; இலவசமாக உங்களுக்குக் கிடைத்தவற்றை, மற்ற வர்களுக்கு இலவசமாக வழங்குங்கள்'' என்று கூறினர்.

ஒருவருக்கு ஒருவர் துணையாக இருக்கும் பொருட்டு, தம் சீடர்களே, இருவர் இருவராக இயேசுநாதர் சேர்த்து அனுப்பினர்.

''மற்ற பிரயாணிகளேப்போல் கோவேறு கழுதைமீது பிரயாணம் செய்ய வேண்டாம்; உணவும் பணமும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம்; இரண்டு உடைகளும் பையும் எடுத்துச் செல்ல வேண்டாம். தடியும் எடுத்துச் செல்ல வேண்டாம்; செருப்பும் போட்டுக்கொள்ள வேண்டாம்''

என்று இயேசுநாதர் சொன்னதாக மத்தேயு எழுதி இருக்கிறார்.

''சொத்து என எதையும் வைத்துக்கொள்ள வேண்டாம்; ஆனால், இன்றியமையாத முறையில் தேவைப்படுவதை வைத்திருப்பது குற்றமில்லை'' என்று இயேசுநாதர் கூறி இருக்கிறார். மேற்சொன்ன வாக்கியங்களின் கருத்து இதுவே.

உடை, உணவு இவற்றைப் பற்றித் தம் சீடர்களுக்கு எடுத்துச் சொன்ன இயேசுநாதர், எந்த இடத்தில் அவர்கள் தங்க வேண்டும் என்பதுபற்றியும் ஆலோசனை கூறி இருக்கிறார்.

வீடு வீடாகச் செல்லாமல் ஊர்விட்டுச் செல்லும் வரையில் ஒருவருடைய இல்லத்தில் மட்டுமே தங்க வேண்டும் என்று, தம் சீடர்களுக்கு இயேசுநாதர் யோசனை சொல்லி இருக்கிறார்.

வீண் பேச்சுகளில் காலத்தைச் செலவிட வேண்டாம். கருமமே கண்ணாய் இருந்து செய்ய வேண்டிய பணிகளைச் செய்யுங்கள்; வழியில் சந்திப்போருக்கு நெடு நேரம் முகமன் கூறி நேரத்தை வீணாக்க வேண்டாம். சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் பொழுதை வீணே போக்க வேண்டாம்.

உங்களை ஏற்றுக்கொள்கிற ஊர்வாசிகளுடையே நற்செய்தியைப் பரப்புங்கள்; ஏற்காதவர்களுடைய ஊரை விட்டுச் சென்றுவிடுங்கள்.

இவ்வாறு ஆலோசனைகள் கூறி, தம் சீடர்களை, நற்செய்தியைப் பரப்பும் பொருட்டு இயேசுநாதர் அனுப்பி வைத்தார்.

சீடர்கள் புறப்பட்டுச் சென்று நற்செய்தியைப் பரப்பினார்கள்; நோய்களைக் குணப்படுத்தினார்கள்.

உள்ளத்தில் இருக்கும் மாசுகளையும் போக்கினார்கள்; உடலில் இருக்கும் நோய்களையும் போக்கி, மக்களை ரட்சிக்கும் தெய்விகப் பணியில் ஈடுபட்டார்கள்.

• • •

அப்போஸ்தலர்கள் நற்செய்தியை ஊர் ஊராய்ப் பரப்பி வந்த சமயம், சிறைப்பட்டு இருந்த புனலாட்டும் ஜான் முனிவரை, அரசன் ஏரோது ஆந்திபாஸ், சலோம் என்பவளின் விருப்பத்துக்கு இசைந்து, சிரச் சேதம் செய்துவிட்டான். எதற்காகச் செய்தான் என்பதையும் மற்ற விவரங்களையும் முன்பே ஒரு அத்தியாயத்தில் தந்து இருக்கிறோம். அவற்றை மீண்டும் இங்கே விவரிக்கத் தேவை இல்லை.

ஜான் முனிவரின் சீடர்கள், சிரச் சேதம் செய்யப்பட்ட தங்கள் குருநாதரின் உடலைப் பெற்றுச் சென்று, அதை முறைப்படி அடக்கம் செய்தார்கள்.

* * *

போதனை செய்யச் சீடர்களை அனுப்பிய பின்னர், இயேசுநாதர் கப்பர்நகூம் வட்டாரத்தில், குறிப்பிட்ட ஒரு சிறு எல்லைக்குள் மட்டும் போதனை செய்துகொண் டிருந்தார்.

பிறகு, வளர்ந்து தாம் வாலிபனான நாசரத்துக்குச் சென்றார். அந்த ஊர் மக்கள் முதலில் இயேசுநாதரைப் பற்றிப் பெருமை கொண்டாடினார்கள். தங்கள் ஊருக்கு வந்து அங்கேயே நிலைத்துத் தங்கி, தங்கள் ஊரின் பெருமையை அதிகரிப்பார் என்று நினைத்தார்கள்.

ஆனால், இயேசுநாதரோ, நாசரத்தில் தங்காமல், கப்பர் நகூமைத் தன் வாசஸ்தலமாக ஆக்கிக்கொண்டு, தமது பணிகளையும் போதனைகளையும் செய்து வந்தார்.

இது நாசரத்து வாசிகளுக்குப் பிடிக்கவில்லை. அதனால் இந்த முறை இயேசுநாதர் நாசரத்துக்குச் சென்றபோது, அந்த ஊர்வாசிகள் தக்கபடி இயேசுநாதரை வரவேற்கவும் இல்லை; மரியாதை செய்யவும் இல்லை.

இயேசுநாதர்பால் நாசரத்து வாசிகள் நடந்துகொண்ட விதத்தை முன்பே ஒரு அத்தியாயத்தில் விவரித்து இருக்கிறோம்.

இயேசுநாதர்

(வாழ்க்கை வரலாறு)

∴

வெளிப்படுத்திக்கொண்ட காலம்

∵

இறுதி மூன்று ஆண்டுகள்

(இரண்டாம் ஆண்டு)

இயேசுநாதர்
(வாழ்க்கை வரலாறு)

உணவு கொடுத்தார்

போதனை செய்து நற்செய்திகளைப் பரப்ப இயேசுநாதர் அனுப்பின பன்னிரு சீடர்களும், போதனை செய்துவிட்டு, இயேசுநாதரிடம் திரும்பினார்கள்.

இது சமயத்தில் புனலாட்டும் ஜான் முனிவரை ஏரோது ஆந்திப்பாஸ் சிரச்சேதம் செய்துவிட்டான் என்னும் துக்ககரமான செய்தி இயேசுநாதருக்கு எட்டிற்று.

விவரம் தெரியவந்து, இயேசுநாதர் பெரிதும் கவலையில் ஆழ்ந்தார்.

ஆகவே இயேசுநாதர், தாம் இதுவரை பணியாற்றிய கப்பர்நகூமை விட்டு, வேறு ஒரு ஊருக்குப் போகத் தீர்மானித்தார்.

வேறு ஒரு ஊருக்குச் சென்றால் களைப்புடன் திரும்பி இருக்கும் சீடர்களுக்கு ஓய்வு கிடைக்கும்; ஜான் முனிவரைச் சிரச்சேதம் செய்த கொடியவன் ஏரோது ஆந்திப்பாஸ் ஆளும் எல்லையைக் கடந்து சென்றாலன்றி, இது சாத்தியம் இல்லை என்று இயேசுநாதர் கருதினார்.

ஆகவே, கப்பர்நகூமைவிட்டு இயேசுநாதர் புறப்பட்டார். தம் சீடர்களையும் அழைத்துக்கொண்டு, படகில் ஏறி, ஏரியின் மறு கரையில் இருக்கும் பெத்சைதா என்னும் ஊருக்குப் போனார்.

இந்த ஊர் பிலிப்பு என்பவன் ஆட்சியின் கீழ் இருந்ததால், ஏரோது ஆந்திப்பாஸ் செய்யும் தொந்திரவுகள்

குறைந்து போகும். அதோடுகூட, ஜானும் பீட்டரும் ஆண்ட்ருவும் ஜேம்ஸும் இந்த ஊரைச் சேர்ந்தவர்கள்.

இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் ஏரியின் மறு கரைக்குப் போவதைக் கவனித்த ஜனங்கள், தாங்களும் ஏரியின் மறு கரைக்குப் போகத் தொடங்கினார்கள். ஏரியை நீந்திக் கடந்தும், கரையோரமாக நடந்தும், ஏரியின் மறு கரைக்குப் போனார்கள். பாஸ்கு விழாவுக்குச் செல்லும் யாத்ரீகர் கூட்டமும் சேர்ந்துகொண்டதால், அந்தக் கரையில் மக்கள் கூட்டம் மிகவும் பெரிதாய்ப் போயிற்று.

நண்பகல் நேரத்தில், தம் சீடர்களுடன் இயேசுநாதர் ஏரியின் மறு கரையில் இறங்கினார். தம்மை எதிர்பார்த்து, மக்கள் கூட்டம் அங்கே மிகுதியாய் இருப்பதைக் கண்டு, இயேசுநாதர் அவர்கள்மீது பரிவுகொண்டார். அங்கு வந்திருக்கும் கூன், குருடு, செவிடு, தொழுநோயுற்றோர், மனம் தெளிவற்றோர் ஆகியோரை இயேசுநாதர் குணப்படுத்தினார். நண்பகல் நேரத்தில் தொடங்கிய பணியை இருட்டும் வரை தொடர்ந்து இயேசுநாதர் அலுப்பும் சலிப்பும் இன்றிச் செய்துகொண் டிருந்தார்.

கூடியிருந்த மக்கள், பசி தாகத்தை மறந்து, நடக்கும் புதுமைகளைக் கண்ணுற்றும், செய்த போதனைகளைச் செவியுற்றும் ஆச்சரியத்தில் மூழ்கி இருந்தார்கள். அதனால் அந்த இடத்தைவிட்டு மக்கள் நகருவதாய் இல்லை.

இதைக் கவனித்த இயேசுநாதரின் சீடர்கள், "இங்கு இருக்கும் மக்கள் அனைவருக்கும் சாப்பாட்டுக்கு எப்படி ஏற்பாடு செய்வது?" என்று யோசித்தார்கள். நேரத்தோடு இவர்களை அனுப்பிவிட்டால், ஊருக்குள் சென்று, மக்கள் உணவு வாங்கி உண்ண வசதியாய் இருக்குமே என்று நினைத்தார்கள்.

சீடர்களின் மனநிலையை அறிந்த இயேசுநாதர், "நீங்கள் இந்த மக்களுக்கு உணவுக்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொன்னார்.

"இவர்கள் அனைவருக்கும் உணவுக்கு எப்படி ஏற்பாடு செய்வது? இரு நூறு தெனியருக்கு வாங்கி வந்தாலும்,

ஆளுக்கு ஒரு கவளம் கொடுக்கக்கூட அது போதாதே!'' என்று பிலிப்பு கூறினார்.

அதற்கு இயேசுநாதர், ''உங்களிடம்இப்போது எவ்வளவு ரொட்டிகள் இருக்கின்றன?'' என்று வினவினார்.

விசாரித்துப் பார்த்தபோது, ஒரு சிறுவனிடம் ஐந்து ரொட்டிகளும், பொரித்த மீன்கள் இரண்டும் இருப்பதாகத் தெரிய வந்தது.

''இத்தனை பேருக்கும் இந்த ஐந்து ரொட்டிகளும், இரண்டு மீன்களும் போதுமா?'' என்று ஆண்ட்ரு வியப்புடன் கேட்டார்.

இதற்குப் பதில் சொல்லும் தோரணையில், ''ஜனங்களைச் சாப்பிட உட்காரச் சொல்லுங்கள்'' என்று இயேசுநாதர் சொன்னார்.

ஐம்பது ஐம்பது, நூறு நூறு, பேராக ஆண்கள் மட்டும் மொத்தம் ஐயாயிரம் பேர்கள் பந்தியில் உட்கார்ந்தார்கள்.



சிறுவனிடம் இருக்கும் ஐந்து ரொட்டிகளையும் இரண்டு மீன்களையும் இயேசுநாதர் தன்பால் கொணரச் சொன்னார்.

சிறுவன் கொணர்ந்து கொடுத்ததும் அவற்றை வாங்கி, வானை நோக்கி, முதலில் இயேசுநாதர் இறைவனுக்கு நன்றி கூறினார். பிறகு ரொட்டிகளையும் மீன்களையும் விண்டு, தம் சீடர்களிடம் கொடுத்து, ''இவற்றை எடுத்துப் போய்ப் பந்தியில் பரிமாறுங்கள்'' என்று சொன்னார்.

அதன்படி சீடர்கள் செய்தார்கள். பரிமாறப் பரிமாற மீனும் ரொட்டியும், குறைவுபடாமல் பெருகிக்கொண்டே இருந்ததால், அத்தனை மக்களும் திருப்தியுடன் சாப்பிட்டார்கள். அனைவரும் சாப்பிட்ட பின்னர், பன்னிரண்டு கூடை அளவு மீனும் ரொட்டியும், மீந்து போயின.

இந்த நிகழ்ச்சி, பல போதனைகளை உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது. அவை வருமாறு:

(1) எல்லாருக்கும் உணவு அளித்துக் காப்பவர் கடவுள்.

ஆகவே, சாப்பிடும்பொழுது, கடவுளை நினைந்து, அவருக்கு நன்றி செலுத்திவிட்டு, மனிதன் உணவை உட்கொள்ள வேண்டும்.

(2) நம் சிறு காணிக்கையை நாம் கடவுளுக்குச் செலுத்தினால், இறைவன் அருள் சுரந்து அதை நமக்கு அதிகமாக்கிக் கொடுப்பார்.

(3) உடற்பசியை மட்டும்போக்கிக்கொள்ள முயலாது, ஆன்மப் பசியையும் அகற்றிக்கொள்ள மனிதன் முயல வேண்டும்.

(4) நம்மைப்பற்றிக் கடவுளுக்குக் கவலையுண்டு. நம் அன்றாடத் தேவைகளையும் கவனித்துக்கொள்பவர் அவர்.

ஐந்து ரொட்டிகளையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரத்துக்கு மேலான பேருக்கு இயேசுநாதர் உணவு படைக்கச் செய்த ஏற்பாட்டைக் கண்டு, அங்கு இருந்த மக்கள் அனைவரும் அதிசயித்தார்கள். ''இத்தகைய ஒருவர் தங்களுக்கு அரசராய் வாய்த்துவிட்டால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? சோற்றுப் பஞ்சம் என்பதே நாட்டில் இராதே!'' என்று நினைத்து, அவரை அரசராக்கமுயன்றார்கள். அரசராய் இருக்கச் சம்மதியாவிட்டால், ஆர்ப்பாட்டம் செய்து கட்டாயப்படுத்துவார்களோ என்ற அசம்பாவிதமான ஒரு நிலைமை அப்போது அங்கு நிலவியது.

இதை இயேசுநாதர் தெரிந்துகொண்டார். நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டும், சீடர்களைக் காப்பாற்றும் பொருட்டும் இயேசுநாதர் ஒரு ஏற்பாடு செய்தார்.

சீடர்களை முதலில் பத்திரமாகப் படகின் மூலம் கப்பர் நகூமுக்கு அனுப்பி வைத்தார்; பிறகு மக்களுக்குத் தெரியாமல், இரகசியமாக ஒரு தனி இடத்துக்கு இயேசுநாதர் போய்விட்டார்.

ஒரு மலைச் சாரலுக்குச் சென்று, இரவு முழுதும் அங்கே இயேசுநாதர் தியானத்தில் ஆழ்ந்து இருந்தார்.

மனிதன் உயிர்வாழச் சாப்பாடு தேவைதான்; ஆயினும் சாப்பாட்டை மட்டும் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு மனிதன் வாழக் கூடாது.

இந்த உண்மையைத் தெரிந்து மனிதன் வாழ வேண்டும் என்னும் நற்செய்தியை, இந்த நிகழ்ச்சி நமக்கு உணர்த்துவதாக நாம் கொள்ளலாம்.

நீரின்மீது நடந்தார்

கூட்டத்தின் மத்தியிலே இயேசுநாதரை மட்டும் விட்டுவிட்டு, பிரிந்து போகச் சீடர்களுக்கு மனம் வரவில்லை. அவருக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதும் சாத்தியமாகத் தோன்றவில்லை. ஆகவே, அவர் கட்டளையிட்டபடி படகில் ஏறிக்கொண்டு, அவர்கள் புறப்பட்டார்கள்.

படகு புறப்பட்டது. இருட்டு நேரம்; வழக்கம்போல் புயல் வீசத் தொடங்கிற்று. படகு காற்றால் அலைப்புண்டு தத்தளித்துத் தடுமாறியது. சீடர்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. செய்வது அறியாது அவர்கள் திகைத்தார்கள்; செல்ல வேண்டிய திசையில் செல்லாது, படகு வேறு பக்கம் சென்றுகொண்டிருந்தது. ஆகையால் படகின் பாயைச் சுருட்டிக் கட்டிவிட்டு, துடுப்புகளைக் கொண்டு, படகைச் செலுத்தும் காரியத்தில் சீடர்கள் ஈடுபட்டார்கள். ஆயினும், சமாளிக்க முடியாது அவர்கள் தவித்தனர்.

இரவு முழுதும் புயலில் சிக்கி, சீடர்கள் அவதிப்பட்டனர்; புயல் ஓயவில்லை.

பொழுது புலரத் தொடங்கிற்று; படிப்படியாகக் கீழ்வானத்தில் வெளிச்சம் தோன்றலாயிற்று. சீடர்கள் அந்தத் திசையை நோக்கினர்; என்ன ஆச்சரியம்! ஒரு மனிதர் ஜலத்தின்மீது நடந்து வந்துகொண்டிருந்தார்; அவருடைய நடையில் பதட்டமோ, பரபரப்போ, தவிப்போ, தத்தளிப்போ இல்லை. நிலத்தின்மீது நடப்பதைப் போலவே, நீரின்மீதும் அந்த மனிதர் சாவதானமாக நடந்து வந்தார்.

அந்த மனித உருவம் தங்களை நாடி வந்துகொண்டிருப்பதைச் சீடர்கள் கவனித்தனர். ''பூதம் வருகிறது! பூதம் வருகிறது!'' என்று கிலி பிடித்து அவர்கள் அலறினர்.

''நான்தான், தைரியமாய் இருங்கள்; பயப்பட வேண்டாம்'' என்று இயேசுநாதர் அவர்களுக்குத் தைரியம் சொன்னார்.

இருந்தும் சீடர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. வருபவர் இயேசுநாதர்தானா என்பதை, ஒரு புதுமை மூலம், பீட்டர் தெரிந்து கொள்ளப் பிரியப்பட்டார். ''கர்த்தரே! தாங்கள் என்பதுஉண்மையாயின், நீர்மீது நடந்து தங்கள்பால் வர எனக்கு உத்தர விடுங்கள்'' என்று கூறினார்.



''வருக!'' என்று இயேசுநாதர் அவரை அழைத்தார்.

உடனே படகை விட்டு இறங்கி, நீரின் மீது நடந்து, பீட்டர் இயேசுநாதரிடம் போனார். ஆனால், ஒரு நேரத்தில் அவருக்கு நம்பிக்கை குறையவே, நிலை தடுமாறித் தண்ணீருக்குள் மூழ்கப் போனார். ''கர்த்தரே! காப்பாற்றும்'' என்று கதறினார் பீட்டர்.

கையை நீட்டி, பீட்டரை இயேசுநாதர் மேலே தூக்கினார். ''நம்பிக்கை குறைந்து நீ ஏன் சந்தேகமுற்றாய்?'' என்று பீட்டரை, இயேசுநாதர் இதமாகக் கண்டித்தார்.

பிறகு இருவரும் படகில் ஏறிக்கொண்டார்கள். காற்று வீசுவது நின்று போயிற்று; எல்லாரும் ஏரியின் மறு

கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஜெனசரத் என்னும் இடத்தில் அவர்கள் இறங்கினார்கள். அந்த இடம் கப்பர்நகூமிற்குத் தெற்கே சுமார் இரண்டு மைல் தொலைவில் இருந்தது.

சிறந்த வாழ்வு எது?

வாழ்வு மேன்மையடைய வேண்டுமாயின்—அதாவது ஈடேற்றம் அடைய வேண்டுமாயின்—அதற்கு இரு துறைகளில் மனிதன் கவனம் செலுத்த வேண்டும். ஒரு துறையில் மட்டும் அதிகக் கவனம் செலுத்தி, மற்றொரு துறையில் போதிய கவனம் செலுத்தாது இருந்தால், அதனால் விளையும் பயன் விபரீதமாய் இருக்கும்.

வயிறார உண்டு உடலை வளர்ப்பதில் மட்டும் கவனம் செலுத்தி, உள்ளத்தைப் *பக்குவப்படுத்தி வளர்ப்பதில்—அதாவது ஆத்ம ஈடேற்றத்தில்—மனிதன் கவனம் செலுத்தாது வாழ்க்கை நடத்துவானாயின், அவனுடைய வாழ்க்கை வெறும் விலங்கு வாழ்க்கையாக அமைந்துவிடும்.

அப்படி யின்றி, ஆன்ம ஈடேற்றத்தில் மட்டும் அதிகக் கவனம் செலுத்தி, உடலை முற்றிலும் கவனியாதிருப்பதும் முறையாகாது.

எனினும் உடல் நலத்தில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும், ஆன்ம ஈடேற்றத்தில் மனிதன் அதிக அக்கறை கொள்ள வேண்டும். ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டாய், உடலைத் தியாகம் செய்யக் கூடிய நிலைக்கு மனிதன் வர வேண்டும்.

இந்த உண்மையை இயேசுநாதர் திட்டவட்டமாக எடுத்துக் கூறி இருக்கிறார்; வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டியும் இருக்கிறார்.

முன்பு ஒரு அத்தியாயத்தில் உணவு சம்பந்தமாய் இயேசுநாதர் புரிந்த ஒரு புதுமையை நாம் பார்த்தோம். ஐந்து ரொட்டிகளையும் இரண்டு மீன்களையும் கொண்டு

ஐயாயிரம் மக்களுக்குத் தமது தெய்விக சக்தியால் இயேசு நாதர் உணவு கிடைக்கச் செய்தார்.

இந்தப் புதுமையைக் கண்டு மக்கள் பெரிதும் வியப் புற்றனர். இத்தகைய ஒருவர் நாட்டுக்கு அரசராய் இருந் தால், நாட்டில் பசியும் இராது, பட்டினியும் இராது, பஞ்ச மும் இராது என்று கருதினர். ஆகவே, இயேசுநாதரைத் தங்கள் அரசராகச் செய்துகொள்ள அந்த மக்கள் ஆசைப் பட்டனர்.

உணவை மட்டும் பிரதானமாகக் கருதி வாழும் இந்த மக்களுக்கு அரசராய் இருக்க இயேசுநாதர் விரும்பவில்லை. ஆகவே, அவர்களிடமிருந்து நழுவி, இயேசுநாதர் வேறு ஒரு இடத்துக்குப் போய்விட்டார்.

சாப்பாட்டில் மட்டும் விருப்பமுள்ள மக்களுக்கு அது எளிதாயும் இலவசமாயும் கிடைப்பது தெரியவந்தால், அவர் கள் சும்மா இருப்பார்களா? கூட்டம் கூடி, அந்த இடத்திலே கூடாரம் போட்டுவிட மாட்டார்களா?

இப்பொழுதும் மக்கள் அப்படித்தான் நடந்துகொண் டார்கள். தங்களுக்கு உணவு அளித்த இயேசுநாதர் நழுவிப் போனதும், முதலில் அந்த மக்கள்,வருத்தம்அடைந்தார்கள். பிறகு, அவரைத் தேடிக் கண்டுபிடிப்பது என்ற தீர்மானத் துடன் புறப்பட்டார்கள்.

இரண்டு மூன்று நாட்கள் தேடிய பின்னர், கப்பர் நாகூமில் இயேசுநாதரை அவர்கள் கண்டார்கள். கண்ட தும் பேச்சைத் தொடங்கும் பொருட்டு, ''போதகரே! எப் பொழுது தாங்கள் இங்கே வந்தீர்கள்?'' என்று கேட் டார்கள்.

எதற்காகத் தம்மைத் தேடி அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை இயேசுநாதர் அறிந்தவராய், உணவை மட்டும் இலட்சியமாகக் கொண்டு வாழ்வது கூடாது என்பதை அவர் களுக்கு அறிவுறுத்த விரும்பினார். இயேசுநாதரைப் பெரிய மந்திரவாதியாகவும் மருத்துவராகவும் கருதினார்களேயன்றி, அவர்கள் அவரை ஒரு இரட்சகராகத் தெரிந்துகொள்ள வில்லை. இந்த உண்மையை அவர்களுக்குச் சுட்டிக் காட்டி,

இயேசுநாதர் தெளிவுபடுத்த விரும்பினார். ''நான் செய்யும் புதுமைகளுக்காக நீங்கள் என்னை நாடி வரவில்லை. வயிறு நிறைய உண்டு இருப்பதால்தான் என்னைத் தேடி நீங்கள் வந்திருக்கிறீர்கள்'' என்று சொன்னார்.

அவர்களுக்கு உணவுத் தேட்டத்தில் நாட்டம் இருப்பதையும், ஆன்ம ஈடேற்றத்தில் நாட்டம் இல்லாது இருப்பதையும் எடுத்துக் காட்டிவிட்டு மேலும் அவர் சொன்னார்:

''நிலையற்ற உணவுக்காகப் பாடுபடாதீர்கள். அழிவில்லாது எப்பொழுதும் நிலைத்து இருக்கும் உணவுக்காக உழையுங்கள். அதை நான் உங்களுக்குத் தருவேன். இதற்காகவே, எல்லாம் வல்ல இறைவனான பிதா, அத்தாட்சிகளுடன் என்னை இங்கே அனுப்பியுள்ளார்'' என்று சொன்னார்.

''இறைவனுடைய விருப்பம் நிறைவேற வேண்டுமாயின், அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கூட்டத்தில் இருந்தவர்கள் கேட்டார்கள்.

''இறைவன் விருப்பத்தை நீங்கள் நிறைவேற்ற விரும்பினால், நான் சொல்லுகிறபடி நீங்கள் நடக்க வேண்டும். உங்கள் ஆசைக் கனவுகளுக்கு நான் கூறுவது மாறுபட்டதாய் இருக்கிறதே என்று நீங்கள் ஆயாசப்படக் கூடாது'' என்று பதில் சொன்னார் இயேசுநாதர்.

''நீர் இறைவனிடமிருந்து வந்தவர் என்பதை எப்படி நாங்கள் நம்புவது? அதற்குரிய சான்று உம்மிடம் ஏதாவது உண்டா? நம் மூதாதை மோசஸ், மன்னா என்னும் உணவை வானத்திலிருந்து தருவித்துக் கொடுத்து நம் முன்னோரைக் காப்பாற்றினாரே; அத்தகைய அடையாளம் ஏதாவது உம்மிடம் உண்டா?'' என்று கேட்டார்கள்.

மோசஸ் என்னும் பெரியவரை யூதர்கள் பெரிதும் மதித்தார்கள். தங்களின் தனிப் பெரும் தலைவர் எனக் கருதி, அவரைப் பெரிதும் கொண்டாடினார்கள். பாலைவன வெளியில் உணவின்றி அவதிப்பட்ட மக்களுக்கு, வானத்திலிருந்து மன்னா என்னும் உணவைத் தருவித்துக் கொடுத்து மக்களை மோசஸ் காப்பாற்றினார். ''அவருக்குள்ள தகுதியும் ஆற்ற

லும் அருகதையும் உமக்கு உண்டா?'' என்று இயேசுநாதரை மக்கள் கேட்டார்கள்.

இதற்கு இயேசுநாதர் பதில் சொன்னார். ''உங்களுக்கு மோசஸ் தந்த உணவு, வான உலக உணவு அன்று; அந்த உணவை உங்களுக்குத் தந்தவர் என் வான் உலகத் தந்தையே யன்றி, மோசஸ் அல்ல. இதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். நான் தரும் உணவு மோசஸ் தந்த உணவை விட மேன்மையானது, நித்தியமானது; வான் உலகிலிருந்து கிடைப்பது'' என்று சொன்னார்.

''அப்படியானால் அந்த உணவை எங்களுக்குத் தாருங்கள்'' என்று கூட்டத்தில் இருந்தவர்கள் கேட்டார்கள்.

உடனே இயேசுநாதர், அவர்களிடம், ''அந்த உணவு நானே! எனது மாமிசத்தை உண்டு, எனது குருதியை நீங்கள் பருகினால், உங்களுக்கு எப்பொழுதுமே பசியும் இருக்காது, தாகமும் இருக்காது'' என்று சொன்னார்.

இயேசுநாதர் இப்படிச் சொன்னதும் கூட்டத்தில் இருக்கும் மக்கள் கலக்கம் அடைந்தார்கள். ''போதனை கடுமையாய் இருக்கிறதே! இது மனிதர் செய்யக் கூடிய காரியமா?'' என்று அஞ்சினார்கள்.

''காட்டுமிராண்டிகள் செய்யும் காரியத்தை அல்லவா, இவர் நம்மைச் செய்யச் சொல்லுகிறார்'' என்று சிலர் அங்கலாய்த்தார்கள்.

''நம் மூதாதை மோசஸைவிட இவர் பெரியவராம்! வானத்திலிருந்து வந்தவராம். இந்த மனிதருடன் தொடர்பு கொள்வதே ஆபத்து ஆபத்து!'' என்று சிலர் முணுமுணுத்தார்கள்.

இயேசுநாதர் சொன்னதின் உட்கருத்தை அவர்கள் புரிந்துகொள்ள வில்லை.

''மண்ணுலக வாழ்வு மட்டும் ஒருவனை மேன்மையாக்காது; விண்ணுலக வாழ்வை அடைய விரும்புபவன் மண்ணுலகில் உடலைத் தியாகம் செய்ய வேண்டும்; ரத்தத்தைச் சிந்த,—பிறர் ரத்தத்தை அல்ல, தன் ரத்தத்தைச் சிந்த—அவன் தயாராய் இருக்க வேண்டும். அது மட்டும் அன்றி

தெய்விக சம்பந்தமானவர்களுடன், அதாவது இறை மகனாகிய தம்மோடு தொடர்புகொண்டு வாழத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்னும் கருத்தில் இயேசுநாதர் போதனை செய்தார்.

கடுமையான இந்தப் போதனையை ஏற்க மக்கள் தயாராய் இல்லை. ''சூசையின் மகன்தானே இவர்! ஏதோ வானிலிருந்து இறங்கினவர் போலத் தற்பெருமை யடித்துக் கொள்கிறாரே! இவருடன் இருப்பது ஆபத்து'' என்று எண்ணியவர்களாய், சீடர்களில் பலர் இயேசுநாதரைவிட்டுப் பிரிந்துபோய்விட்டார்கள்.

மண்ணுலக வாழ்வில் தோய்ந்து வாழும் மனிதனுக்கு விண்ணுலக வாழ்வில் நாட்டம் இராது; இயேசுநாதரோ விண்ணுலக வாழ்வைப்பற்றியே அடிக்கடி அழுத்தமாகப் பேசினார்.

இது இயேசுநாதரின் சீடர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் அவரைவிட்டுப் பிரியத் தொடங்கினார்கள்.

சீடர்கள் பிரிந்து போனதற்காக இயேசுநாதர் வருந்தவில்லை. ''யார் வந்தாலும் சரி, யார் போனாலும் சரி, உண்மைக்கு எப்பொழுதுமே அழிவில்லை'' என்பதை இயேசுநாதார் முற்றும் அறிந்தவர். அதனால்தான் கலக்க மடையாது இயேசுநாதர் உறுதியுடன் இருந்தார்.

எல்லோரும் போய்விட்ட பிறகு அப்போஸ்தலர் பன்னிருவர் மட்டுமே இயேசுநாதர் அருகே எஞ்சி நின்றனர். அவர்களின் மனநிலையையும் இயேசுநாதர் தெரிந்துகொள்ள விரும்பினார். ஆகவே, அவர்களை நோக்கி, ''நீங்களும் போய் விடுகிறீர்களா?'' என்று கேட்டார்.

அதற்கு, பீட்டர் என்னும் அப்போஸ்தலர் முன் வந்து, ''ஆண்டவரே! நீர் இறைவனுடைய புதல்வர். என்பதை நாங்கள் அறிவோம். உம்மிடமே நித்திய வாழ்வின் வார்த்தை உண்டு!'' என்று பதில் சொன்னார்,

கொந்தளிப்பு

எந்த இடத்திலும் அதிக நாட்கள் நிலைத்துத் தங்காமல் இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் ஊர் ஊராகச் சென்று போதனை செய்து வந்தார்கள்.

அப்படி அவர்கள் போதனை செய்து வந்த சமயம், ஒரு முறை பெந்தகோஸ்து விழாவின்போது, ஜெருசலம் நகருக்கு வந்து, அதன் வட பகுதியில் இயேசுநாதர் தங்கி இருந்தார். அவர் பொதுப் பணியில் ஈடுபட்டு, இரண்டாம் ஆண்டு நடந்துகொண் டிருந்தது.

ஜெருசலம் நகரில் ஐந்து மண்டபகங்களுள்ள குளம் ஒன்று இருந்தது. குருடர், முடவர், நொண்டி, சப்பாணி முதலிய நோயாளிகள் அந்த மண்டபங்களில் தங்கி இருப்பர். எதிர்பாராத சமயங்களில், வானதூதன் வந்து அந்தக் குளத்து நீரை அசைவிப்பதுண்டு. அப்படி அசைவிக்கும் சமயம், எந்த நோயாளி முதலில் குளத்தில் இறங்குகிறானோ, அவனுக்கு நோய் முற்றும் குணமாகிவிடுவது உண்டு.

அந்தக் குளத்தில் இறங்கி, தன்னைப் பீடிக்கும் நோயைக் குணப்படுத்திக்கொள்ள ஒரு நோயாளி முப்பத்தெட்டு ஆண்டுகளாக முயன்று வந்தான். சாத்தியப்படவில்லை.

இந்த நிலையில் ஒரு நாள் இயேசுநாதர் அங்கு வந்தார். இத்தனை ஆண்டுகளாகத் துன்புற்று நலியும் அந்த நோயாளி மீது இயேசுநாதர் பரிவுகொண்டார். ஆகவே, அவனை அணுகி, ''குணமாகப் பிரியந்தானே?'' என்று கேட்டார்.

''ஆம். ஐயனே! குளத்து நீர் அசைவுறும்போது, அருகே என்னை அழைத்துச் செல்ல யாரும் எனக்குத் துணை செய்யவில்லை. நான் இறங்குவதற்குள், வேறு ஒருவன் முந்திக்கொண்டு, குளத்தில் இறங்கிவிடுகிறான். முப்பத்தெட்டு ஆண்டுகள் காத்துக் கிடந்தும் ஒரு ப்பயனையும் காணோம்'' என்று மிக்க வருத்தத்துடன் சொன்னான்.

உடனே இயேசுநாதர் அவனை நோக்கி, ''உன் படுக்கையை எடுத்துக்கொண்டு எழுந்து நட'' என்று கூறினார்.

அந்த நோயாளி, குணமடைந்து எழுந்து நடந்தான்.